ஸ்ரீ வராஹ மஹா தேஶிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீ ரங்கராமாநுஜ மஹா தேஶிகாய நம:
ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

தேஶிகோபநிஷத்

தொகுப்பு

திருப்புல்லாணி **ஸ்ரீ உ.வே. ஸ்ரீநிவாஸாசார்யர்**
சென்னை-91.

ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஆஶ்ரமம்
எண்.1/138, தெற்கு ரத வீதி, திருப்புல்லாணி-623 532.

அன்றே அடைக்கலம் கொண்ட நம்
ஆதிஜகந்நாதப் பெருமாள் திருப்புல்லாணி

சதுர்முகேஶ்வரமுகை: புத்ர பௌத்ராதிஶாலிநே ।
நம: ஸீதா ஸமேதாய ராமாய க்ருஹமேதிநே ॥

ஶ்ரீ:



ஸ்ரீ வராஹ மஹா தேஶிகாய நம:
ஸ்ரீமதே ஸ்ரீ ரங்கராமாநுஜ மஹா தேஶிகாய நம:
ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

தேஶிகோபநிஷத்

தொகுப்பு:
திருப்புல்லாணி ஸ்ரீ உ.வே. ஸ்ரீநிவாஸாசார்யர்
சென்னை-91.

வெளியீடு:
ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஆஶ்ரமம்
1/138, தெற்கு ரத வீதி, திருப்புல்லாணி-623 532
போன் 04567-257242

முதற் பதிப்பு : செப்டம்பர் 2020

வெளியீடு:
ஶ்ரீரங்கம் ஶ்ரீமதாண்டவன் ஆஶ்ரமம்
1/138, தெற்கு ரத வீதி,
திருப்புல்லாணி-623 532
போன் 04567-257242

விஜ்ஞாபநம்

ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

பாண்டிய நாட்டு திவ்யதேசங்களில் தொன்மையானதும், ஸ்ரீ திருமங்கையாழ்வாரால் மங்களாசாஸநம் செய்யப்பட்டதும், மிகவும் பாவனமான ஸமுத்ர தீர்த்தத்தைக் கொண்டதுமான **ஸ்ரீ ஆதிஸேது - ஸ்ரீ ரத்னாகர ஸேது** என்று போற்றப்படும் **ஸ்ரீ புல்லாரண்ய க்ஷேத்ரத்தில் (திருப்புல்லாணி)** அமைந்திருக்கும் ஸ்ரீரங்கம் ஸ்ரீமதாண்டவன் ஆஶ்ரமத்தில் வெகு அழகாக ஸேவை ஸாதிக்கும் ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன் ஸந்நிதியில் பல வருஷங்களாகவே நடந்து வரும் ஸ்வாமியின் வார்ஷிக மஹோத்ஸவத்தை - இந்த வருஷமும் (752வது **வருஷம்) வழக்கம் போல்** குதூஹலத்துடன் கொண்டாடத் திட்டமிடப் பட்டுள்ளது.

நிகழும் ஶார்வரி ஸ்ரீ புரட்டாசி **மீ** 11 உ (27.09.2020) ஞாயிற்றுக்கிழமை ஸ்வாமி ஸ்ரீ **தேஶிகனின்** திருவவதார **திருநக்ஷத்ரம்.**

ஷ உத்ஸவத்தை பரம. பரி. இத்யாதி **ஸ்ரீமதாண்டவன் ஸ்ரீ வராஹ மஹாதேஶிகனின்** பரமாநுக்ரஹத்துடனும், நியமனப்படியும், ஸ்ரீ முநித்ரய ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகரான **ஸ்வாமி ஸ்ரீ திருக்குடந்தை ஸ்ரீ கோபாலார்ய மஹாதேஶிகனின்** திருவவதார திருநக்ஷத்ரமான புரட்டாசி - பூர்வாஷாடா தினத்தன்று (25.09.2020) உபக்ரமித்து மூன்று நாட்களுக்கு (25.09.2020 முதல் 27.09.2020 வரை) வேத, திவ்யப்ரபந்த பாராயணங்களுடனும், ஸ்ரீ தேஶிக திவ்ய ஸஹஸ்ர நாமாவளி அர்ச்சனையுடனும், ஸ்ரீஹயக்ரீவ , ஸ்ரீந்ருஸிம்ஹ, ஸ்ரீஸுதர்ஶந ஹோமங்களுடனும், கோலாஹலமாகவும், மிகச் சிறப்பாகவும் கொண்டாட ஏற்பாடுகளாகி வருகின்றன.

ஒவ்வொரு வருஷமும் **ஆசார்யரின்** திருநக்ஷத்ர தினத்தன்று நம் ஸ்வாமியைப் பற்றியோ அல்லது அவர் ஸாதித்தருளிய க்ரந்தங்களின் ஸாராம்ஶங்களைப் பற்றியோ ஒரு சிறிய ஆனால் சீரிய நூலை வெளியிட்டு ஆஸ்திகர்கள் அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் திளைக்கும்படிச் செய்வது ஸ்ரீ திருப்புல்லாணி ஆஶ்ரமத்தின் வழக்கம். இதற்கு முக்ய காரணமே ஸ்ரீமதாண்டவனின் அருளாசியும், ஆலோசனைகளும் மற்றும் இக்கிளையின் நிர்வாஹியான **ஸ்ரீ உ. வே. ரகுவீர் தயாள்** ஸ்வாமியின் அயராத உழைப்பும், விடாமுயற்சியும், ஈடுபாடும்தான் என்றால் அது மிகையாகாது.

முந்தைய வெளியீடுகளில் **சந்தமிகு தமிழ் மறையோனான** ஸ்வாமியின் அருளிச் செயல் அனுபவம், தேஶிக ப்ரபந்தானுபவம், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸார வாக்யங்களின் (ஸ்ரீ தேஶிக மொழிகள்) அர்த்தங்கள் ஆகியவற்றை ஸமர்ப்பித்து பரவஶப்பட்டோம். அதே போன்று, இந்த வருஷமும் பாரோர் புகழும்படியும், அனைவருக்கும் பயன்படும் வகையிலும் இந்த புஸ்தகத்தில் உபநிஷத் வாக்யங்களும் மற்றும் ஶாஸ்த்ர, வேதாந்த, ஸித்தாந்த விஷயங்கள் எவ்வாறு ஸ்ரீ தேஶிக ஸ்தோத்ரங்களில் பொதிந்து கிடக்கின்றன என்ற விவரங்களை அடக்கி ஸ்வாமி ஸாதித்தருளிய தேஶிக ஸ்தோத்ரங்களின் ஸாரமான அர்த்தங்களை **''தேஶிகோபநிஷத்''** என்கிற தலைப்பில் வெளியிடுகிறோம். அனைவருக்கும் இந்த புஸ்தகமானது மிக்க மகிழ்ச்சியையும், ஆனந்தத்தையும் தரும் என்று நம்புகிறோம்.

ஸ்வாமி ஸாதித்தருளிய ஸ்தோத்ர க்ரந்தங்கள் - 28 ஆகும். இந்த ஸ்தோத்ரங்களில் உள்ள மொத்த ஸ்லோகங்களின் எண்ணிக்கை - 862 ஆகும். இந்த ஸ்தோத்ரங்களில் கையாளப்பட்டிருக்கும் விருத்தங்களின் எண்ணிக்கை

(அமைப்பு) - 22 ஆகும். ஒவ்வொன்றினுடைய அமைப்பு, சைலி, பொருள் ஆகியவைகளைக் காண்கின்ற போழ்து நம்மை ப்ரமிப்பிலாழ்த்தி வியக்க வைக்கின்றன. அனைத்து ஸ்தோத்ரங்களும் அதி கம்பீரமாகவும், அர்த்தபுஷ்டி நிரம்பியவையாகவும் திகழ்கின்றன. **'இளமையில் கல்'** என்ற தமிழ் மூதுரைக்கேற்ப அந்த காலத்தில் நம் பெரியோர்கள் இந்த ஸ்தோத்ரங்களை தாங்கள் தினந்தோறும் அநுஸந்திப்பது மட்டுமின்றி இளஞ் சிறார்களான ஆண், பெண் குழந்தைகளுக்கு சந்தை சொல்லி கற்பித்து அவர்களை நன்மக்களாக ஆக்குவதில் ஊக்கத்துடன் உறுதுணை புரிந்தனர்.

ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் ஸாதித்துள்ள இந்த ஸ்தோத்ரங்கள் அனைத்து வர்ணத்தவர்களும், ஸ்த்ரீகளும் வேதாந்த விழுப்பொருளின் உட்பொருளை உணர்ந்து தெளிய வேண்டும் என்றும், அவர்கள் உஜ்ஜீவிப்பதற்கு இதுவே ஹேது என்றும், நம்பால் பேரன்பு கொண்டு பரம காருண்யத்தோடு எழுதி அநுக்ரஹித்தார். ஸ்தோத்ரங்களில் மறைமுகமாக மந்த்ரார்த்தங்களையும் விளக்கி பேருதவி புரிந்துள்ளார்.

இப்படி சீரும் சிறப்பும் மிக்க இந்த ஸ்தோத்ரங்களிலிருந்து சில ஸ்லோகங்களை எடுத்து அதன் ஆழ்ந்த பொருளையும் உட்கருத்துக்களையும் கூறுவதே இந்த புஸ்தகத்தின் நோக்கம். ஸ்ரீ தேசிக ஸ்தோத்ரங்களில் நாம் காண்பது என்ன என்றால், (a) உபநிஷத் வாக்யங்களின் பொருள் (b) ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்ட விஷயங்களின் ஸாரம் (c) தத்துவ, ஹித, புருஷார்த்தங்களின் விபரம் (d) ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் ஸாரம்.

ஸ்ரீ தேசிக ஸ்தோத்ரங்களில் மேலே கூறப்பட்ட விஷயங்களின் கருத்துக்கள் நன்கு ப்ரதிபலிக்கப்படுகிறது.

நம்மை பொறுத்தவரை நமக்காக ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன் ஸாதித்தருளிய அனைத்து விஷயங்களும் உபநிஷத்துக்களிலும் ஶாஸ்த்ரங்களிலும் கூறப்பட்டதே எனக்கொண்டு இந்த புஸ்தகத்திற்கு ''தேஶிகோபநிஷத்'' எனப் பெயரிட்டிருக்கி றோம். அனைவரும் வாங்கி, வாசித்து, ஆழ் பொருளை அனுபவித்து அறிய வேண்டும் என்பதே எங்கள் அவாவும் இதை வெளியிடுவதின் நோக்கமுமாகும்.

ஸ்ரீநிவாஸ தாஸன்
திருப்புல்லாணி

சென்னை
27-08-2020

ஶார்வரி ஸ்ரீ
ஆவணி மீ 11 உ
குரு வாஸரம்

தேசிக ஸ்தோத்ர பாடங்களுக்கான ஸ்வாமி ஸ்ரீ தேசிகனின் தனியன்

ஸ்ரீமாந் வேங்கட நாதார்ய: கவி தார்க்கிக கேஸரீ !
வேதாந்தா சார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி!!

பொருள் :

கவிகளுக்குள்ளேயும் தர்க்க ஶாஸ்த்ரம் கொண்டு (வாதம்) புரிபவர்களுக்குள்ளேயும் ஸிம்ஹம் போன்று இருப்பவரும் வேதாந்த விழுப்பொருளின் உண்மையான அர்த்தத்தை அறிந்தவரும் வேதாந்தாசார்யர் என்று ஸ்ரீ பெரிய பெருமாளாலே பிருதளிக்கப் பட்டவரும் திருநிறைச் செல்வரும் ஸ்ரீ வேங்கடநாதன் என்னும் திருப்பெயரைக் கொண்டவருமான இந்த மிக உயர்ந்த ஆசார்யர் அடியேனுடைய உள்ளமான ஹ்ருதயத்தில் நித்யமாக வஸிக்கட்டும்!!

1. ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்ரம்

இந்த ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்ரம் மூலம் நாம் அறிந்துகொள்வது:

ப்ரஹ்மமே ஜகத் காரணம், அவனே சேதநம் அசேதநம் முதலான ஸகல வஸ்துக்களையும் படைத்து அவற்றுள் அந்தர்யாமியாக உறைகிறான்.

அபர ஹயக்ரீவன் என்று போற்றப்படும் ஸ்வாமி ஸ்ரீ தேஸிகன் எம்பெருமானைப் பற்றிப் பாடிய பலவகையான ஸ்தோத்ரங்களுள் அவருடைய திருவாக்கிலிருந்து முதன் முதலில் அவதரித்த ஸ்தோத்ரம் ''**ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்ரம்**'' ஆகும்.

திருவயிந்தையில் தனது ஆசார்யரான **ஸ்ரீ அப்புள்ளார் ஸ்வாமி** உபதேஸித்த **கருட மந்த்ரத்தை** ஜபித்து கருடனை ஸாக்ஷாத்காரம் பண்ணி அதன் பின்னர் அவர் உபதேஸித்த **ஸ்ரீ ஹயக்ரீவ மந்த்ரத்தை** ஜபித்து ஹயக்ரீவனையும் ஸாக்ஷத்காரம் பண்ணி அதன் அநுபவ பரீவாஹமாக ஸ்ரீ ஹயக்ரீவனை தனது க்ரந்தங்களில் பல இடங்களில் அநுஸந்திக்கிறார், நம் ஸ்வாமி.

இந்த துதி நூல் 33 ஸ்லோகங்கள் கொண்டது. ஸ்வாமியே இதனை ஹயக்ரீவ **ஸம்ஸ்துதி** எனக் கூறுகிறார். இதில் அவனுடைய கல்யாண குணங்களை வெகுவாக அநுபவிக்கிறார். சிற்சில பதிப்புகளில் முதல் ஐந்து ஸ்லோகங்கள் சற்றே மாறுபட்டு இருக்கும்.

ஆதாரம் ஸர்வ வித்யாநாம் என்பதற்கு இணங்க 32 ஸ்லோகங்கள் அமைந்தது எப்படியுள்ளது என்றால் ப்ரஸித்தி பெற்ற 32 ப்ரஹ்ம வித்யைகளைக் குறிக்கின்றது என்னலாம்.

முதல் ஐந்து ஸ்லோகங்களும் மங்கள ஸ்லோகங்களாகும்.

ஆறாவது ஸ்லோகம் - **முக்த இதி** என்று தன்னை அறியாப் பிள்ளை என்று நைச்யாநுஸந்தானம் செய்து கொள்கிறார்.

ஸ்லோகங்கள் ஏழு முதல் ஒன்பது வரை உலகில் ஸாதாரண வழக்கில் சொல்லப் படுகின்ற ஸரஸ்வதீ வித்யாதிஷ்டான தேவதை என்று நினைப்பது சரியல்ல எனவும் எல்லோரும் ஸர்வ உத்க்ருஷ்டனான எம்பெருமானான ஸ்ரீமந்நாராயணின் அநுக்ரஹத்தால் பெருமை பெற்றவர்கள் என்றும் விவரிக்கிறார்.

ஸ்லோகம் 10 - **ஸ்ரீமந் நாராயணனே ஸர்வ கர்ம ஸமாராத்யன் என விளக்குகிறார்.**

ஸ்லோகம் 11, 12, 13 - உபநிஷத்துக்கள் கோஷிக்கின்றபடி அவனே **ஜகத் காரண பூதன்.** வஸ்துக்கள் மற்றும் பொருள்கள் அனைத்தும் அவனுக்குச் சரீரம் - அவன் எல்லாவற்றிற்கும் அந்தர்யாமி; பெரியோர்களின் யோகத்திற்கு இந்த எம்பெருமானே விஷயமாகிறான், என அறுதியிடுகிறார்.

ஸ்லோகம் 14 முதல் 27 வரை பரிமுகப் பெருமாளை அண்டியவன் ஸகல வாக் ஸித்தியைப் பெறுகிறான். அவனை அடைந்தோர்கள் பெறும் ஆனந்தம் அளவில்லாதது; தனக்கு அவனிடத்தில் பக்தியும் வாதத் திறமையும் வேண்டும் என்று ப்ரார்த்திக்கிறார்.

ஸ்லோகம் - 28-30 : **விதக்த கோஷ்டி** - பண்டிதர்களின் ஸமாகமம் - குழு. வாதங்களில் பிற மதத்தினரை கவிபாடுபவர்களையும், யுக்திவாதம் செய்பவர்களையும் அடியேன் வெற்றி கொள்ள வேண்டும். அதற்கு ஏற்றபடி, **ஜிஹ்வாக்ர ஸிம்ஹாஸந மப்யு பேயா:** ஹே! ஹயக்ரீவ ஸ்வாமியே! அடியேனுடைய நாவின் நுனியை உனக்கு ஸிம்ஹாஸநமாகக் கொண்டு அதில் நீ எழுந்தருளியிருக்க வேண்டும் என்று வேண்டுகிறார்.

ஸ்லோகம் 31 - **இது ஸ்ரீஹயக்ரீவ த்யாந ஸ்லோகம்**. ஸ்ரீ ஹயக்ரீவ திவ்ய மங்கள விக்ரஹத்தின் ஸ்வரூபத்தை வெகு அழகாக விவரிக்கின்றார். நான்கு கரார விந்தங்களாலே வலக்கை ஆழி இடக்கை ஶங்கம் என்றும் இடது கரதலத்தில் ஸ்ரீ கோஶத்தையும் வலக்கையில் ஜ்நாந முத்ரையையும் ஏந்தி ஸேவை ஸாதிக்கின்றான். அழகிய வெண் தாமரை மலரிலே வீற்றிருக்கின்றான். அவனுடைய சோபை ஒரு பொழுதும் குன்றாமல் இருக்கிறது. குற்றமற்ற பெருமைகளை உடையவன். கல்விக்கு முதற் கடவுளான இத்தகைய ஸ்ரீ ஹயக்ரீவப் பெருமான் அமுதம் போல் வெண்மையாய் குளிர்ந்திருக்கின்ற தன்னுடைய கிரணங்களை வீசி அடியேனை எப்பொழுதும் குளிர்விக்கவேண்டும். இந்த அழகான திருக்கோலம் என் கண்ணுள்ளும் நெஞ்சுள்ளும் எப்பொழுதும் நீங்காமல் இருக்கட்டும். அடியேன் வேண்டுவது ஈதே! என்று ப்ரார்த்திக்கிறார்.

ஸ்லோகம் -33; பல ஶ்ருதி ஸ்லோகம். **வாகர்த்த ஸித்தி ஹேதோ:** என்கிறார் ஸ்வாமி! நல்ல திருந்திய ஜ்நாநம், ராஸிக்யம், கவிபாடும் கிறமை போன்றவைகள் இந்த ஸ்தோத்ரத்தை பக்தியுடன் ஸேவிப்பவர்களுக்கு ஸித்தமாகட்டும் என்று பலன் கூறுகிறார். மற்றும் சில ஆசார்யர்கள் ஸ்ரீ ஹயக்ரீவனை துதிப்பதால் நற்கல்வி, ஜ்நாநம் அறிவு மட்டுமல்ல அர்த்தம் - பொருட் செல்வமும் கிடைக்கும் என்பதையும் ஸூசகமாக தெரிவிப்பார்கள்.

குறிப்பு:

வேதவ்யாஸர் அருளிச் செய்த ப்ரஹ்ம ஸூத்ரத்திற்கு ஸ்ரீ பாஷ்யம் அருளிய நம் பெரும்பூதூர் வந்த வள்ளலான ஸ்ரீ பாஷ்யகாரர் முதல் அத்யாயம் மற்றும் இரண்டாம் அத்யாயத்தில்

கூறுகின்ற காரண வஸ்து பரப்ரஹ்மம் தான் என்பதும் இப்படிப்பட்ட ப்ரஹ்மத்துக்கு உண்டான இந்த ஜகத் காரணத் வத்தை எக்காரணத்தைக் கொண்டும் யாராலும் மறுக்க இயலாது என்று சொல்லியபடி, இந்த ஸ்ரீ ஹயக்ரீவ ஸ்தோத்ரத்தில் அதே கருத்தினை மீண்டும் ஸ்திரப்படுத்துகிறார் நம் ஸ்வாமி, என்பதே தீர்ந்த பொருள்.



2. ஸ்ரீ கருட பஞ்சாஶத்

> உபநிஷத்துக்களில் கூறப்பட்ட **'மாத்ரு தேவோ பவ'** என்னும் வாக்யத்திற்கு இணங்கவும் என்ன **நோன்பு பெற்றார் கொலோ இவனைப் பெற்ற தாயார்** என்பதற்கு ஏற்ப க்ருதஜ்ஞதையை விளக்கியருளும் துதி.

ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேஶிகனுக்கு ஸ்ரீ ஹயக்ரீவ மந்த்ரத்தை உபதேஶித்து தமது மூர்த்தியையும் அநுக்ரஹித்தார் ஸ்ரீ வைநதேயர். இப்படிப் பேருதவி புரிந்த ஸ்ரீ கருட பகவானுக்கு துதி பாடுவது தம்முடைய ஸ்வரூபம் என்பதால் அவரைப் பற்றி 51 ஸ்லோகங்களை அருளிச் செய்து மகிழ்ந்தார். பின்பொரு ஸமயம் ஸ்வாமியின் ஸ்வப்நத்தில் கருடன் தோன்றி தம் விஷயமாக இந்த ஸ்தோத்ரத்தை இயற்றும்படி நியமித்ததாகவும் அந்த ஆணைக்கிணங்க இதை அருளிச் செய்ததாகவும் பெரியோர் கூறுவர். இந்த அபிப்ராயத்தை உறுதிபடக் கூறுவது போல் அமைந்துள்ளது கடைசி ஸ்லோகம். **விநதா நந்தனம் நந்தயிஷ்யன்** என்கிற பதங்கள் இதன் பொருளையே உரைக்கும்.

கருடனைப் போல மிடுக்கான சைலி இந்த ஸ்தோத்ரம். இதன் அழகும் காம்பீர்யமும் ஒப்பில்லாதது. கருட மந்த்ரம் ஐந்து அக்ஷரங்களைக் கொண்டது. இந்த ஸ்தோத்ரமும் ஐந்து வர்ணங்களை (பகுதிகள்) உடையது. ஸ்தோத்ரம் முழுவதும் ஸ்ரீ கருட பகவானுடைய மஹா ப்ரபாவத்தையும் அவர் செய்த அத்புதச் செயல்களையும் விரிவாகக் கூறுகிறது.

திருப்பாவையில் ஐந்தாம் பாசுரமான **மாயனை** என்கிற பாசுரத்தில் ''**தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனை** என்ற வரிகள் வருகிறதல்லவா? அதை நினைவிற் கொண்டு

ஸ்வாமி ஸ்ரீ தேசிகனும் இதில் ஒன்பதாவது ஸ்லோகத்தில் இவ்வாறு ஸாதிக்கிறார்.

இந்த்ரனுடைய லோகத்தில் யாரும் நெருங்க முடியாதபடி ஒரு பெரிய சக்கரம் சுழன்று கொண்டிருக்கும் இடத்தில் அம்ருத கலசம் வைக்கப் பட்டுள்ளது. கருடனோ எந்தவிதமான தடங்கல்களையும் உபத்ரவத்தையும் சற்றும் பொருட் படுத்தாமல் அதி பராக்ரமத்துடன் அங்கே சென்று அமுதத்தை அபஹரித்தார். தேவர்களும் இந்த்ரனும் கூட்டமாக வந்து இவர் ஒருவரை எதிர்த்தனர். அனைவரையும் தன்னுடைய தோள் வலிமையால் எதிர்த்து நின்று வெற்றி வாகையும் சூடினார். இதனைக் கண்ணுற்ற பெருமானும் மிக்க மகிழ்ச்சியோடு வரம் கொடுத்தார். இவரும் அவனுக்கு வரம் கொடுக்க, இருவரும் ப்ரீதிக்குப் போக்குவீடாக பரஸ்பரம் கலந்து பரிமாறிக் கொண்டனர். இச் செயலினால் கருடனின் புகழ் எங்கும் பரவியது. இங்கே ஸ்ரீ தேசிகன் ஸாதிக்கிறார். இப்படி எல்லையில்லாப் பெருமையுடைய கருடனைப் பெற்ற மஹா பாக்யசாலியான தக்ஷ ப்ரஜாபதியின் பெண்ணாகிய **விநதா தேவி** நமக்கு ஸகல க்ஷேமங்களையும் நல்க வேண்டும் என ப்ரார்த்திக்கிறார்.

வேதம் ''**மாத்ரு தேவோ பவ**'' என்று அறிவுறுத்தியதை நடைமுறையில் அநுஷ்டித்து காட்டிய ஸ்ரீ கருட பகவானின் **திருத் தாயாரைக்** கொண்டாடுகிறார். மஹான்கள் மற்றும் ஆசார்யர்களின் அணுகுமுறை இவ்விதம் தான் இருக்கும் என்பதை ஸ்ரீ ராம குணாநுபவத்தில் இழிந்த ஸ்ரீ விஸ்வாமித்ரரும் ''**கௌஸல்யா ஸுப்ரஜா ராம**'' என்று இராமனைத் தனக்கு ஸஹாயமாக அளித்த தாயாகிய கௌஸல்யையைக் கொண்டாடி மகிழ்கிறார். ஸ்வாமியும் ''**விஸ்வாமித்ர குல மல்லவா!** முன்னோர்களும் ரிஷிகளும் காட்டிய அதே வழியை- வேதம்

விரித்துரைத்த புனித வழியைக் காட்டியருளுகிறார். நமக்கு ஹிதோபதேஶத்தையும் சொல்கிறார்.

இனி கடைசி ஸ்லோகத்தின் காம்பீர்யத்தைக் காணுங்கள். இந்த ஸ்லோகத்தில் ஸ்வாமி தாமே **கவிகதக கடா கேஸரீ வேங்கடேஶ:** என்று மிகப் பெருமையுடன் பேசிப் போந்த இடம். கவிகளும் தார்க்கிகர்களும் நிறைந்த கூட்டத்திற்கு சிங்கம் போன்ற ஸ்ரீ வேங்கடேஶனால் இயற்றப்பட்டது என்று கூறி இது கருடனுடைய நியமநத்தை முன்னிட்டுக் கொண்டு எழுதப் பட்டது எனவும் இந்த ஸ்தோத்ரத்தின் பலனை வரையறுத்துச் சொல்ல இயலாது எனவும் விஷக் காய்ச்சல் ஸர்ப்ப, விஷ ஜந்துக்களினால் ஏற்படும் பயம் தெய்வக் குற்றங்கள் போன்றவை யனைத்தும் தொலைந்துவிடும் என்றும் மனக் கவலைகளும், துன்பங்களும் ஒழிந்து போகும் எனவும் இதனைப் பாராயணம் செய்பவர்கள்பால் கருடனின் பரிபூர்ண அநுக்ரஹம் உறுதியாகக் கிட்டும் எனவும் இவ்வளவு ஏன்? அவர்கள் கருடனைப் போன்ற பெருமையையும் புகழையும் அடைவர் என்று கூறி ஸ்தோத்ரத்தைத் தலைக் கட்டுகிறார்.

3. கருட தண்டகம்

பகவத் கைங்கர்யமாகிய புருஷார்த்தத்திற்கு எல்லை நிலம் பாகவத கைங்கர்யமே என்பதை அநுஷ்டித்துக் காண்பிக்கிறார். அதுவே ஜீவனின் ஸ்வரூபம் என்பதையும் கூறுகிறார் இந்த ஸ்தோத்ரத்தில்.

ஆசார்யர் அருளிய அத்புதமான ஸ்தோத்ரமிது. கருட தண்டகம் என்று தாமே திருநாமமிட்ட ஸ்தோத்ரம். நித்ய ஸூரிகள் கோஷ்டியில் இருப்பவர், எம்பெருமானுக்கு வாஹநமாக இருப்பவர். வேதாத்மா என்றும் விஹகேஶ்வரர் என்றும் போற்றப்படுபவர். பறவையுருவில் ஸேவை ஸாதிப்பவர். வாலகில்யர்கள் என்னும் மஹரிஷிகளின் ஶபதம் நிறைவேற கருடனாய் அவதரித்தவர். பின் இந்த்ரனுடன் ஏற்பட்ட ஸமாதானத்தால் தேவர்களுக்குத் தலைவனாக இந்த்ரனும் பக்ஷிகளின் ஸமூஹத்திற்குத் தலைவனாக இவரும் நியமிக்கப் பட்டார். அதனால் இவர் பக்ஷிராஜன். கருடன் வேத ஸ்வரூபியானதால் அவரைப் பாடுவது தானே உசிதம். எனவே, நம் ச்ரோத்யேந்திரியங்களுக்கு இனிமையாக இருக்க, ஓசை ஒலி கேட்க 'தண்டகம்' என்ற அமைப்பில் பாடி மகிழ்கிறார் ஸ்வாமி.

ஸ்தோத்ரத்தில், கருடனுடைய அழகிய சிறகுகள், அம்ருதத்தைக் கொணர்ந்து தன் தாயின் அடிமைத் தன்மையை நீக்கியது, ஸங்கர்ஷணனாக இருக்கும் இவருடைய அம்ஶம், ஐந்து வித ரூபங்கள் கொண்ட தன்மை, எம் பெருமானுக்கு வாஹநமாகவும், கொடியாகவும் (கருடத்வஜம்) நிற்றல், வேதாந்த வித்யையை அருளுதல் போன்ற பல பெருமைகளைப் பரக்கப் பேசி மகிழ்கிறார் ஸ்வாமி. நம் ஸ்வாமி பெருமாள் கோவிலில் எழுந்தருளியிருந்த மையம் ஒரு பாம்பு பிடாரன் வந்து கர்வ பங்கம் ஏற்பட்டு பின்பு க்ஷமாபணம் செய்து கொண்டு போனான் என்ற வரலாற்றுக் கதை ஒன்றும் உண்டு.

இந்த ஸ்தோத்ரத்தில் என்ன ஶாஸ்த்ரார்த்தம் உள்ளது என்று கேட்போருக்கு பதிலாக அமைந்திருக்கிறது மூன்றாவது சூர்ணிகை.

அத்யாத்ம வித்யா விதேயா விதேயா |
பவத்தாஸ்ய மாபதயேதா தயேதா ஶ்சமே ||

பொருள்:

ஶ்ரீ கருட பகவானே! உமக்கு நமஸ்காரங்கள். தேவரீர் வேதாந்த வித்யைகளை அடியேனுக்கு அதீனமாக இருக்கும்படி செய்தருள வேண்டும். உமக்கு ஆட் படுத்திக் கொண்டு உமக்கு கைங்கர்யங்களை அடியேன் செய்யுமாறு அருள்புரிய வேண்டும். உம் கருணை அடியேன்பால் இருக்க வேண்டும், என ப்ரார்த்திக்கிறார்.

பகவத் பக்தனாக இருப்பதைக் காட்டிலும் பாகவத பக்தனாக இருப்பது மிகவும் ஶ்ரேஷ்டமானது என்பது ஶாஸ்த்ரங்களில் ப்ரஸித்தம். (ஶ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரம்- புருஷார்த்த காஷ்டாதிகாரம்) பாகவதர்களுக்குச் செய்யும் தொண்டே பணியே சாலச் சிறந்தது எனவும் அதுவே ஸர்வ சேஷியான பகவானுக்கும் உகப்பான செயல் என்பதும், அதுவே பகவத் கைங்கர்யத்தின் எல்லை நிலமாகும் என்பதும் ஸ்பஷ்டம். திருப்பாணாழ்வாரும் **அடியார்க்கு ஆட்படுத்தும் விமலன்** என்றும் தொண்டரடிப் பொடியாழ்வாரும் **உன் அடியார்க்கு ஆட்படுத்தாய்! பள்ளி எழுந்தருளாயே** என்றும், **உற்றதும் உன் அடியார்க்கு அடிமை** என திருமங்கையாழ்வாரும் விண்ணப்பித்தபடி ஶ்ரீ தேஶிகனும் நித்ய ஸூரிகள் கோஷ்டியில் விளங்குபவரான ஶ்ரீ கருடாழ்வாரிடம் கைங்கர்யத்தை ப்ரார்த்தித்தபடி.

எம்பெருமானிடம், ஒரு ஜீவன் ப்ரபத்திக்குப்பின் வேண்டக் கூடியது பக்தி - ஜ்ஞானம் - ஸத்ஸம்ருத்தி என்ற மூன்று தான். மற்ற பலன்கள் எதையும் எம்பெருமானிடம் வேண்டக் கூடாது என்பது ஶாஸ்த்ர ஸம்மதம்.

திருவாய்மொழியில் உள்ள **பயிலும் சுடராளி** பதிகத்தையும் **''நெடுமாற்கடிமை''** பதிகத்தையும் இந்த இடத்தில் அநுபவிப்பது சாலத்தகும்.

பல பெருமைகள் உள்ள இந்த கருட தண்டகத்தை ஸேவித்து எதிரிகளால் ஏற்படக் கூடிய தீங்குகளையும் நம் இஷ்ட ப்ராப்தியையும் ஒருங்கே பெறலாம் என்று பலஶ்ருதியிட்டு இதனை முடிக்கிறார் ஸ்வாமி.

4. ஸ்ரீ பகவத் த்யாந ஸோபாநம்

*ஆழ்வார் ஸாதித்தபடி நிற்பதும், இருப்பதும், கிடப்பதும் என் நெஞ்சுளே! என்ற உண்மையை விளக்கும் ஸ்தோத்ரம். ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் அஸாதாரணமான **அம்ஶங்களை** ப்ரதாந ப்ரதிதந்த்ரத்தை விளக்கும் அத்புத ஸ்தோத்ரம்.*

அழகிய மணவாளனைப் பற்றிய அபூர்வமான, அழகான ஸ்தோத்ரமிது.

தேவதைகளை பாதாதி கேச பர்யந்தமாகவும் மனுஷ்யர்களை திருமுடி முதல் திருவடி வரை வர்ணிப்பது கவிகளின் மரபு.

நம் பாணன் என்று ஸ்வாமியால் போற்றப்படும் **திருப்பாணாழ்வாரால்** அருளிச் செய்யப் பட்ட **அமலனாதிபிரான்** என்னும் ப்ரபந்தமே இதற்கு முன்னோடி என்று கூறலாம்.

பகவானுடைய த்யாநத்திற்கு படிக்கட்டாக அமைந்திருக்கிறது, இந்த ஸ்தோத்ரம். ஸ்வாமி இரண்டு படிக்கட்டுகள் கட்டினார். இது ஒன்று. (பகவத் த்யாந ஸோபாநம்) மற்றொன்று **பரமபத ஸோபாநம்.** ஏணி வைத்து ஏணி வாங்குவது ஆசார்யன் க்ருத்யம் அல்லவா!

த்யாநம் என்கிற சொல்லுக்கே பல பொருள்கள் உண்டு. உபாஸனம், பக்தி யோகம் போன்றவைகள், ஸ்வாமி இதனை மனதிற்கொண்டு "**பக்திம் காடாம் திஶது**" என்று முடிக்கிறார் எம் பெருமானிடத்திலே ஸ்திரமான பக்தியை இந்த ஸ்தோத்ரம் அளிக்கட்டும் என்கிறார்,

மொத்தம் 12 ஸ்லோகங்கள் **த்வாதஶாக்ஷரம்** போல் இருக்கின்றது. கையாளப் பட்டிருக்கும் அனைத்துப் பதங்களும் ஸ்வாரஸ்யமானவை.

ரஸகனமான இந்த ஸ்தோத்ரத்திலிருந்து இரண்டு ஸ்லோகங்களை அநுபவிப்போம்.

ஸ்லோகம் - 1 (அந்தர் ஜ்யோதி) விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம் நிரூபணம் செய்யப்படுகிறது. இதில் ஜ்ஞான யோகம் பக்தியோகம் முதலியவற்றை அநுஷ்டிக்க முடியாதவர்கள் - சக்தி இல்லதவர்கள் - அஶக்தர்கள் **ப்ரபத்தி** என்று சொல்லக் கூடிய லகு உபாயத்தை அங்கங்களோடு அநுஷ்டித்தால் அவர்களுக்கு எம்பெருமான் அவர்கள் கோலின காலத்தில் அவர்களுடைய இஷ்டத்தைப் பூர்த்தி செய்கிறான்.

இதை **''தீநா நாத வ்யஸந ஶமநம்''** என்று அருளி இருப்பதால் விளங்குகிறது. எம்பெருமானைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டுமாயின், அவனை வேதங்களின் மூலமாகவே அறிய முடியும். மற்றைய ஸாதனங்களினால் (ப்ரத்யக்ஷம், அநுமானம்) பயன் இல்லை. இதனைக் குறிக்கும் வண்ணம் **''திவ்யம் சக்ஷு: ஶ்ருதி பரிஷதாம்''** என்று காண்பிக்கிறார். அடுத்தாற்போல் **தைவதம் தைவதாநாம்** என்பதினால் எல்லா தெய்வங்கட்கும் மேம்பட்ட தெய்வமாய் - **ஸ்ரீமந் நாராயணனே பரதத்வம்** என்று விளக்குகிறார். **நாராயணன் பரன்**, என்று ஸ்வாமியே ஸாதித்த படியும் **சோராதனைத்தும் அவன் உடம்பெனும் சுருதிகளால்** என்ற நம் ஸித்தாந்தத்தை விளக்கும் பாசுரங்களையும் இங்கு மனதிற் கொள்க!

ஸ்லோகம்-11 **(காந்தோ தாரை)**

கண்ணுக்கு குளிர்ச்சியாக கண் கொள்ளாக காட்சியாக ஸேவை ஸாதிக்கிறான் அரங்கநகரப்பன். அவனுக்குச் சற்று

முன்புறத்தில், தானே, நம்பெருமாளாக வேறொரு திருக் கோலத்திலே அழகிய திருக்கைகளில் வளையணிந்த வடுக்களும், வில்லை நாணேற்றிய தழும்புகளையும் கண்டு ஸேவித்து மகிழ்கிறார். அந்த திருக்கைகள் பெரிய பிராட்டியார். உறையும் திருமார்புக்கு பாதுகாப்பான பெரிய தாழ்ப்பாள் போல் உள்ளது. நான்கு திருக்கைகளில் அபய ரக்ஷைக்கான ஆயுதங்கள் ஏந்தி நின்ற கோலத்தோடு உபய நாச்சிமார்களுடன் உபய காவேரி மத்தியில் அனைவரும் ஸேவித்து உய்ய வேண்டுமாய் காட்சி தருகிறான். இது மட்டுமா? அல்ல! **அடியேனுடைய உள்ளத்திலும் அந்த நிலையிலேயே ஸாஶ்வதமாக உறைந்து** விளங்குகின்றான். **மத்யே ரங்கம்** - திருவரங்கத்தின் நடுவிலேயும் **மமச ஹ்ருதயே** - என்றுடைய உள்ளத்திலும் (இதயக் கோவிலிலுள்ளும்) **வர்த்ததே** - உறைகின்றான், ஸாவ ரோத: எல்லோருடனும், படுக்கையோடும் என் ஹ்ருதயத்தில் குடி கொண்டு விட்டான் என்று கூறி மகிழ்கிறார். இது ஆழ்வார், நிற்பதும், இருப்தும் கிடப்பதும் என் நெஞ்சுளே என்பதற்கு ஒப்பாகும்.

5. ந்யாஸ திலகம்

முப்பத்திரண்டு ஸ்லோகங்கள் கொண்ட இந்த ஸ்தோத்ரத்தை ப்ரபத்தி ஶாஸ்த்ர கண்ணாடி என்றே பெரியோர் வழங்குவர். அத்புத ஸ்லோகங்கள். பொருள் பொதிந்த ஶாஸ்த்ரார்த்தங்கள், ப்ரபத்தி ஒரு முறையே அநுஷ்டிக்கக் கூடிய எளிய, லகுவான, ஸுலபமான உபாயம் எனவும் பக்தியோகத்தினால் அடையும் பலனும் இப்ப்ரபத்தியினால் அடையக் கூடிய பலனிற்கும் வித்யாஸம் ஏதுமில்லை எனவும், ஶரணாகதியின் பெருமை, அதன் ஸூக்ஷ்மார்த்தங்கள், இவ்விஷயத்தில் ஏற்படும் சில ஸந்தேஹங்கள் அதற்கு பரிஹாரங்கள் பரமைகாந்த்யத்வத்தின் உண்மைப் பொருள் ஆகியவற்றையெல்லாம் விசதமாகக் கூறும் ஸ்தோத்ரமிது.

ஸ்ரீ அரங்க நகரப்பனைப் பற்றிய துதி நூலிது.

ந்யாஸம் என்றால் ஶரணாகதி என்று பொருள். ஒருவனிடத்தில் வைப்பது என்று கூறலாம். எதை வைப்பது அல்லது ஸமர்ப்பிப்பது என்ற கேள்வி எழும் அல்லவா? அதற்குப் பதிலாக தான் ஸ்வாமி ஸாதிக்கிறார். உன்னுடைய ஆத்மாவை, ஆத்ம ரக்ஷணபரத்தை ரக்ஷண பலத்தை வைத்து விட வேண்டும் என்கிறார். இதுவே **'திலகம்'** என்று கூறுகிறார். ந்யாஸம் வசீகரண ஸாதனம், திலகமும் அப்படியே! திலகம் இடாதவர்களை எம் பெருமான் காண்பதில்லை. ஏற்பதில்லை. அப்படியே **ந்யாஸ வித்யை** என்னும் பெண்ணிற்கு இது திலகம் போன்றது. பெரிய பெருமாள் விஷயமாக இதனை அருளிச் செய்கிறார். த்யாநத்திற்கு ஒன்று. ந்யாஸத்திற்கு ஒன்று.

அர்த்த புஷ்டி நிறைந்த இந்த ஸ்தோத்ரத்திலிருந்து ஆஶ்சர்யமான இரண்டு ஸ்லோகங்களின் அநுபவ ரஸத்தைப் பருகுவோம்.

1 ஸ்லோகம் - 6 - **ப்ருந்தாநி ய:.... மஹாபுஜங்க:!!**

ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணன் ஸ்ரீ க்ருஷ்ணாவதார காலத்தில் யமுனைக் கரையில் உள்ள ப்ருந்தாவனம் என்ற துளஸீ வனத்தில் - பேரழகிகளான அந்த கோப ஸ்த்ரீகளை தன்னுடைய வடிவழகினாலும், வேணுகானத்தினாலும் நற் பண்புகளினாலும் தனக்கு வசமாக்கிக் கொண்டார். இப்படி எளியவனாக பஹுஸுலபனாக இருந்தும் ஸம்ஸாரி சேதநர்கள் தன்னை அறிய மாட்டாதவர்களாய், மேலும் மேலும் இந்த ஸம்ஸாரம் என்னும் துக்கச் சுழலையில் உழல்கின்றனரே என வருத்தப்பட்டு ஸர்வ காலத்திலேயும் எல்லா ஜநங்களையும் தன்பால் ஈர்த்துக் கொள்ள திருவுள்ளப்பட்டு அவர்களுக்கு மோக்ஷ பர்யந்தமான பலன்களை அருளி அவர்களைக் காக்கவே இப்போது **ஸ்ரீரங்க** திவ்ய தேஶத்தில் ஸுகமாய் அரவணையில் யோக நித்திரை செய்கிறான்.

ஸ்ரீ க்ருஷ்ணனாய் விபவாவதாரம் செய்த அவனே இப்பொழுது நம் போல்வார்கள் ஸேவிக்கவும் நம்மை அநுக்ரஹிக்கவும் ''பின்னானார் வணங்கும் சோதி'' என்று திருமங்கையாழ்வார் அருளியபடி ஸ்ரீரங்கத்தில் பள்ளி கொண்டுள்ளான் என்று அர்த்தம். படுக்கையும் புஜங்கன். அதில் (ஆதிசேஷன்) படுக்கிறவனும் **மஹா புஜங்கன்** (விடன், பொல்லாத, காம வஶப் படுத்துமவன், மயக்கி ஆட்கொள்பவன்) என்பது ரஸோக்தியான விஷயம்.

ரங்கே புஜங்க ஶயநே ஸ மஹா புஜங்க:

அழகிய ப்ராஸச் சேர்த்தி; கூடவே, பொருளமைப்பு அழகு. ராஸிக்யம் உள்ளவர்களுக்கே இதன் அழகு தெரியும்

2. ஸ்லோகம் -26; **மாதர் பாரதி..... ஸ்வேநார்ப்பி தோடயம் பர:**

மனோ, வாக், காயம் என்கிற மூன்று கரணங்களுக்குச் செய்யும் உபதேஶமாக அமைந்தது இந்த ஸ்லோகம்.

ஓ வாக்கே! **மானிடம் பாடவந்த கவியல்லேன்** என்று இரு.

ஓ காயமே! **உன்னித்து மற்றொரு தெய்வந் தொழாள்!** என்றிரு.

ஓ மனமே! அற்பர்கள் வாசற் முகப்பில் பிறர் சிரிக்குமாறு நின்று ஏனையோரின் அவமதிப்புக்கு ஆளாகாதே! இப்படிப்பட்ட லோபிகளின் ஸமூஹத்தால் கீழே தள்ளப்பட்டு அடி மற்றும் உதை வாங்கி கடுஞ்சொற்களால் நிந்திக்கப்பட்டு இருக்கும் நிலையில் இருக்காதே, அவர்களிடம் வெறுப்புடன் இரு.

ஸர்வ ஶப்தவாச்யனாய், ஸர்வ ஸுலபனாய், எல்லோருக்கும் ஸ்வாமியாய், மஹாநந்த பூர்ணராய், நமக்கு அந்தராத்மாவாயு மிருக்கிற பெரிய பெருமாளான ஸ்ரீரங்க நாதனிடத்தில் அவன் தன்னாலேயே அடியேன் பொறுப்பு அவனிடம் ஸமர்ப்பிவிக்கப் பெற்றது. இப்படி ஸ்ரீரங்கநாதனை அநுபவிக்கும் ஆனந்தத்தில் முழு மூச்சுடன் ஸதா ஈடுபடுவதே **பரம ப்ராப்யம்** என்றருளுகிறார்.



6. தசாவதார ஸ்தோத்ரம்

ஸ்ரீரங்கம் வட திருக்காவிரிக் கரையில் திருமங்கை மன்னனால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட திருக்கோவிலில் எழுந்தருளியுள்ள தசாவதார மூர்த்திகளைப் பற்றிய ஸ்தோத்ரமிது. எம்பெருமான் அவ்வப்போது எடுக்கும் அவதாரத்தின் நோக்கத்தையும் அதனால் பல்வேறு ஸமயங்களில் பலருக்கும் ஏற்பட்டப் பலன்களையும் கூறுகிறாரிதில். பிராட்டியும் அவன் அவதரிக்கும் காலங்களில் எல்லாம் கூடவே தானும் அவதரித்து ஸஹாயம் செய்து அவதார நோக்கங்களைப் பூர்த்தி செய்கிறாள் என்பது ஸ்வாரஸ்யம்.

தசாவதார ஸ்தோத்ரத்தில் காணப்படும் சாஸ்த்ரார்த்தம். இந்த லீலா விபூதி அவனுடைய லீலா ரஸத்திற்காக ஏற்பட்டது. பெருமான் அவதரிக்கிறான். எதற்கு? நம் போன்ற ஜீவர்களை ரக்ஷிப்பதற்காக, இப்படி அவன் அவதரிக்கின்ற போது அவற்றிற்கு ஏற்றவாறு பிராட்டியும், (அவனைவிட்டு க்ஷணகாலமும் பிரியாத அவளும்) கூடவே அவதரிக்கிறாள். லீலா ரஸத்திற்கு பிராட்டியின் இருப்பும் அவச்யமாயிற்றே. எம்பெருமான் செய்யும் ஒவ்வொரு கார்யமும் பிராட்டியின் உகப்புக்காகத் தானே! எம்பெருமான் அனாயாஸமாகச் செய்யும் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் முதலிய செயல்களுக்கு இவளும் துணை புரிகிறாள். எனவே, அவளுக்கும் இது திருவிளையாடல் ஆகின்றது. பிராட்டி இல்லாமல் எந்தச் செயலையும் எம்பெருமான் செய்வது கிடையாது என்பதே தாத்பர்யம். **தம்பதீ தைவதம் ந:** என்றல்லவோ நம் ஸித்தாந்தம்.

சாஸ்த்ரங்கள் பெருமாளுடைய அவதாரத்திற்கான காரணம் மூன்று என்று நிர்வஹிக்கிறது. (அ) ஸாது பரித்ராணம், (ஆ) துஷ்ட நிக்ரஹம், (இ) தர்மத்தை நிலைநிறுத்துதல்.

பெருமாளுடைய வைபவங்களை கூறுவதற்காக வந்தவை விபவங்கள். ஒரு ப்ரயோஜந வசத்தாலே பத்து அவதாரங்கள் முக்யம் எனக் கொள்ளப்பட்டது. பெருமாளின் இந்த பத்து அவதாரங்களைப் பாடாத, அநுபவிக்காத பக்தரோ, ஆழ்வாரோ, ஆசார்யரோ இல்லை. ஒரு ஸமயம் ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருந்த போது ஸ்ரீ தஶாவதார ஸந்நிதியில் எம்பெருமாளுடைய பத்து அவதாரத் திருமேனிகளையும் கண்டு ஸேவித்து மகிழ்ந்தார். அவ்வநுபவ பரீவாஹமே இந்த ஸ்தோத்ரத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீரங்கநாதனே இப்பத்து அவதாரங்களையும் செய்தருளினான் எனத் தொடங்கிக் கடைசியில் ஒரு ஸ்லோகத்தால் பத்து அவதாரங்களுக்கும் பொருத்தமான அடை மொழியைத் தந்து மகிழ்வுறுகிறார், இந்த ஸ்தோத்ரத்தில். எண்ணிக்கையிலும் ரஸம் உண்டு. ஆழ்வார்கள் அபிநவ தஶாவதாரம் என்பர் பெரியோர். பதின்மர் என்றாலும் ஸ்ரீ ஆண்டாள், மதுரகவிகள், திருவரங்கத்தமுதனார் ஆகிய மூவரையும் சேர்த்தால் 13 ஆகிறது. இந்த ஸ்தோத்ரத்திலும் 13 ஸ்லோகங்கள் என்பது ரஸம்.

தேவோ ந: ஶுபம் ஆதநோது எனத் தொடக்கம். **க்யாதி: ஶுபா ஜ்ரும்பதே!!** என்று முடிவு, என்னே! இந்த ஸ்தோத்ரத்தின் அமைப்பும் அழகும்!

இந்த ஸ்தோத்ரத்தின் கடைசி ஸ்லோகத்தில் **''ஜகந் மங்களம்''** என்ற பதம் வருகிறது. உலகங்களுக்கு நன்மையைப் பயத்தல் என்று இதன் பொருள். அஸ்மதாசார்யன் இவ்விடத்தில் ஒரு அபூர்வமான அர்த்தத்தையும் ஸாதிப்பதுண்டு. ஆயுர்வேத ஶாஸ்த்ரத்தில் **''ஜகந் மங்களம்''** என்ற பெயருடைய ஒரு ஸர்வ ரோஹ நிவாரணி (மருந்து) இருக்கிறது. அனைத்து வ்யாதிகளும் இதனை உட்கொள்வதால் தீர்ந்துவிடுமாம். அது போல, இந்த

ஸ்தோத்ரத்தை படிப்பவர்களுக்கு ஸர்வவித மங்களங்களும் உண்டாக வேண்டும் என்ற அர்த்தத்தை மனதில் கொண்டு ஸ்வாமி இங்கு **''ஜகந் மங்களம்''** என்ற பதத்தைப் ப்ரயோஹித்திருக்கிறார் என்பார்.

அது போன்றே **''திஶாஸு தஶஸு''** என்ற பதம் அனைத்துக்கும் சிகரமாக ஸுபமான க்யாதி (புகழ்) திக்கெட்டும் புகழ் என்பதில்லாமல் பத்து திக்குகளிலும் பரவட்டும் என்று தலைக் கட்டுகிறார்.

7. அபீதிஸ்தவம்

ஸாதுக்கள் மற்றும் ஸாத்விகர்களுடன் ஏற்படும் ஸமாகமமே தலை சிறந்தது என்கிற ஶாஸ்த்ரார்த்தத்தை அறுதியிட்டுக் கூறுகிறாரிதில்.

அபயத்தை விஷயமாகக் கொண்டு அவதரித்த ஸ்தோத்ரமிது. இந்த ஸ்தோத்ரத்தில், ரங்க துர்ய, ரங்கேஶ்வர, ரங்க பூரமண, ரங்க பூரஸிக, ரங்க ப்ருத்வீகா, ரங்க ப்ருத்வீபதி, தயிதரங்க, ரங்கநாத முதலிய திருநாமங்கள் இடம் பெற்றிருக்கின்றன. கலாப காலத்தில் **ஸத்யா காலத்தில்** ஸ்வாமி எழுந்தருளியிருந்த போது அபயம் ஏற்பட ப்ரார்த்தித்த ஸ்தோத்ரமாம். மொத்தம் 29 ஸ்லோகங்கள். அநேக இடங்கள் பக்தர்களின் ராஸிக்யத்திற்கு விருந்தாக அமைந்துள்ளது.

இப்போது ஸ்வாமியின் ப்ரார்த்தனை என்ன? என்பதை ரஸிப்போம். இதுவே இதில் முக்யம்.

ஸ்லோகம் - 28: **யதிப்ரவர பாரதீ..... பரிஸரே ஷு மாம் வர்த்தய!**

ஹே! ரங்க ப்ரபோ! எனது யௌவநப் பருவத்தை ஸ்ரீ பாஷ்யம் முதலிய ஸ்ரீ பாஷ்யகாரர் ஸூக்திகளின் ரஸத்தை அநுபவித்தே கழித்தேன். தற்போது முதுமைப் பருவம் வந்துவிட்டது. தலை முழுவதும் நரைத்துவிட்டது- மலர்ந்த புஷ்பம் போல வெளுத்து விட்டது. இனிமேல், இவ்வுலகில் வாழுமளவும் அடியேனுக்கு ஏற்ற ஒன்று அருளுமாறு வேண்டுகின்றேன். அது என்னவென்றால், சத்ருக்கள் இருப்பரோ என்ற ஸந்தேஹ ப்ரஸக்தியே இல்லாதபடி சத்ருக்கள் அழிக்கப்பட்ட, அதனால் நிர்பயமான ஸ்ரீரங்கம் போன்ற ஏதேனும் உகந்தருளின திவ்ய தேஶங்களில் ஒருவருக்கொருவர் அஸூயை கொள்ளாது ஹிதத்தையே வேண்டுபவராக இருக்கும் ஸாத்விகர்களின் கோஷ்டியில்- ஸ்ரீ வைஷ்ணவர்களின் தீதிலா நல்லோர் திரளிலே அடியேனை வைத்துக் காத்தருள வேணும் என வேண்டுகிறார்.

8. கோபால விம்ஸதி

இந்த ஸ்தோத்ரத்தின் மூலம் கோபால மந்த்ரத்தின் யந்த்ர அமைப்பும் ஸ்ரீகண்ணபிரானின் ஸாக்ஷாத்காரம் ஸ்வாமிக்கு கிடைத்தமையைப் பற்றியும் அறியலாம்.

கண்ணன் விஷயமாக 2640 ஸ்லோகங்கள் **யாதவாப் யுதயம்** என்னும் காவ்ய க்ரந்தத்தின் மூலம் அருளிச் செய்த ஸ்வாமி ஸ்ரீ தேஸிகன் அந்த அநுபவம் சற்றும் குறையாமல் 21 ஸ்லோகங்கள் அடங்கிய இந்த ஸ்தோத்ரத்தை அருளிச் செய்து ஸம்ப்ரதாய ரக்ஷணம் செய்கிறார்.

ஸ்தோத்ரத்தின் பெருமை அளவிடமுடியாதது. **வந்தே** என்று தொடக்கம், **யௌவதப்ரியம்** என்று முடிவு, சொல் லழகினை ரஸித்துக் கொண்டே இருக்கலாம். பகவத் ஸாக்ஷாத்காரமே "பரமபலம்" என்பதை **ஸமீக்ஷதே** என்ற பதம் மூலம் காட்டுகிறார். எம்பெருமானுடைய விலக்ஷணமான ஸ்வரூபம், அவனுடைய பால சேஷ்டிதங்கள், கோப வேஷம், அஜ்ஜலியை கோபிகளிடமிருந்து யாசகமாகக் கேட்டது போன்ற ரஸாநுபவங்களை அநுபவித்துக் கொண்டேயிருக்கலாம். சில ஸ்லோகங்களின் கருத்தை இப்போது பார்ப்போம்.

ஸ்லோகம் - 1

1. **வல்லவீ ஜந வல்லபன்** - ஆயர் குலப் பெண்களுக்கு நாதன், வைஜயந்தி மாலையை தரிப்பவன்.

2. ஸ்லோகம் - 3

   குஹநா ஜநந்ய - வஞ்சனை செய்யத் தாயுருவாகி வந்த பூதனையின் உயிரரையும், பாலையும் சேர்த்தன்றோ பருகிறான். இவன் வேறு யாருமல்ல. பரம புருஷனே! என்று ஊர்ஜிதம் செய்கிறார்.

3. ஸ்லோகம் - 4

நவநீத நாட்யம் - வெண்ணெய்க்காக இவன் ஆடிய நர்த்தனம் அடியேன் கண்முன் எப்பொழுதும் காட்சி தந்து கொண்டே இருக்க வேண்டும் என ப்ரார்த்திக்கிறார்.

4. ஸ்லோகம் - 8

நிகடேஷு நிசாமயாமி - என்னே! ஸ்வாமியின் பாக்யம்! அத்யாச்சர்யமாக ஸாதிக்கிறார். வேதாந்தங்கள், இன்னமும் அவனைக் காண அவனைத் தேடிக் கொண்டிருக்கின்றன. ஆனால், அந்த எம்பெருமான் எனக்கு மிக அருகிலேயே எப்பொழுதும் நான் கண்டுகொண்டு இருக்கின்றபடி ஸேவை ஸாதிக்கின்றானே! என்னே அவன் அழகு! என்னே ஸௌலப்யம்! எனக் கூறி வியக்கிறார். யோகிகளுக் கெல்லாம் கூட அவ்வளவு ஸுலபமாக பெருமாளின் ஸாக்ஷாத் காரம் (மனதில் காணும் பாக்யம்) கிடைக்காது. அடியேனுக்கு கிடைத்ததே என்று வியப்புடன் கூறுகிறார்.

5. ஸ்லோகம் - 12

அதராஹித சாரு வம்ஸநாளா:

அந்திம ஸ்மரணம் - உயிர்பிரியும் காலத்தில் பகவானை நினைத்தல் என்பது ப்ரபந்நனைப் பொறுத்தவரை அவச்யமில்லை என்ற மரபு இருந்தாலும் எம்பெருமான் மீதுள்ள ஈடுபாட்டின் மிகுதியால் அந்தக் கடைசி ஸமயத்தில் புல்லாங்குழலுடனும், மயிற்பீலியுடனும் இந்த்ர நீலக்கல் போன்ற வண்ணமுடைய ஸ்ரீ கண்ணபிரானது தோற்றம் தன் உள்ளத்தில் தோன்ற வேண்டும் என்று வேண்டுகிறார்.

6. ஸ்லோகம் - 20

வாஸோ ஹ்ருத்வா - யமுனையாற்றில் ஆடையின்றி நீராடிய இடைச்சிகளின் ஆடைகளைக் கவர்ந்து கடம்ப மரத்தின் மீதேறியமர்ந்தான் கண்ணன். வெட்கமடைந்த

அப்பெண்கள் தங்களுடைய வஸ்த்ரங்களை திருப்பியளிக்கும்படி வேண்ட ''ஆடையின்றி நீராடக் கூடாது என்கிற ஶாஸ்த்ரத்தை மீறியதால் அதற்கு ப்ராயச் சித்தமாக நீங்கள் தலைமேல் இரு கைகளையும் கூப்பிப் பின்னர் ஆடைகளை வாங்கிச் செல்லுங்கள் என்றான். நீண்ட ஸம்பாஷணைக்குப் பிறகு, அப்பெண்கள் **நாணி இனியோர் கர்மம் இல்லை** என்றுணர்ந்து அஞ்சலி செய்தனர். இச்செய்கையால் அவனையே நீராக்கி விட்டனர். இது க்ருஷ்ணனுக்கு வெற்றியா? பெண்களுக்கு வெற்றியா? என்றால் **''அஞ்சலி''** தான் வெற்றி பெற்றது, என்று அழகாகக் கூறுகிறார். எப்படி என்றால், பெண்கள் ப்ரார்த்திக்கின்றனர் - ஆடையைத் தருமாறு. கண்ணனும் ஒன்றை வேண்டுகிறான், இவர்களிடத்தில். யாசிக்கிறான் கண்ணன், ஒரு கைகூப்பியச் செய்கையை!

பாபச் செயல்களும், ஶாஸ்த்ர வ்ருத்தமான கார்யங்களும் எம்பெருமானுக்கு சீற்றத்தை விளைவிப்பவை. இந்த சீற்றத்திலிருந்து தப்புவதற்கு அவனது அருளைப் பெறவதற்கு **''அஞ்சலி''** ஒன்று தான் சிறந்த உபாயம். இதனை ஸ்வாமி ஆளவந்தாரும்

த்வதங்க்ரி முத்திச்ய கதாபி கேநசித்
யதா ததாவாபி ஸக்ருத் க்ருதோஞ்ஜலி

என்று கூறுகிறார்.

ஸ்வாமியும்,

ப்ரத்யஸ்த்ர மஞ்ஜலி ரஸௌ தவ
நிக்ர ஹாஸ்த்ரே

என்றே அருளிகிறார்.

இறுதியாக இந்த கோபால விம்ஶதியை ஸேவிப்பவர்கள் ஸ்ரீ வேணுகோபாலனை நேரிலேயே காண்பர் என்று பயன் கூறி முடிக்கிறார்.

9. தயா பபதகம்

திருவேங்கடமுடையானுடைய பல்வேறு குணங்களில் முக்யமானது என்று கருதப்படும் கருணை என்னும் குணத்தைப் பற்றியும் அதன் பெருமைகளைப் பற்றியும் பரக்கப் பேசுகிறார். கருணையை பிராட்டியாகவே உருவகப் படுத்தி அத்தேவியோடு ஸம்பாஷிப்பதைப் போல ஸ்லோகங்களை அமைத்திருப்பது இதன் விசேஷம்.

எம்பெருமான் அகில ஹேய ப்ரத்யநீகன். ஸகல கல்யாண குணங்களுக்கும் இருப்பிடமானவன். ஒருவித தோஷமும் அற்றவன். இவ்வாறு எல்லாம் உபநிஷத்துக்கள் கோஷிக்கின்றன. அவனுடைய குணங்களும் பெருமைகளும் எல்லையில்லாதவை. அளவற்றவை, அஸேங்கேயய மானவை என்று கூறுகிறது வேதங்களும் வேதாந்தங்களும். **யதோ வாசா நிவர்த்தந்தே** என்று எம்பெருமானின் பெருமையைப் பேசப்புகுந்த வேதமும் அப்படியே நின்று விட்டது. ஸ்வாமி நம்மாழ்வாரும் திருவாய்மொழியின் துவக்கத்திலேயே உயர்வற உயர் நலம் உடையவன் என்று குணங்களை நன்கு அநுபவிக்கிறார்.

மேலே சொன்ன இக்குணக்கடலில் சிலவகைகள் அவனுடைய பரத்வத்தையும் மேன்மையையும் கூறுவன. சில அவன் அணுகுவதற்கு மிகவும் ஸுலபன். எளிமையானவன் என்று கூறுகின்றன. எம்பெருமானுக்கு உள்ள ஆறு முக்ய குணங்கள் - ஜ்ஞாநம், பலம், ஐஸ்வர்யம், வீர்யம், ஶக்தி, தேஜஸ், ஆகியவையாகும். அவன் ஸர்வஜ்ஞன் தான். ஸர்வ சக்தன் தான். மேலும் அவனுடைய பலவகையான இதர குணங்களாகிற ஸௌலப்யம், ஸௌசீல்யம், வாத்ஸல்யம், காருண்யம்

போன்றவைகள் அவனுடைய எளிமையையும் நம் மீதுள்ள பேரன்பையும் வெளிப்படுத்துகின்றன. எத்தனை குணங்கள் இருந்த போதிலும், ஒருவனுக்கு தயை - கருணை - பரிவு - இரக்கம் - பொறுமை இவைகள் இல்லாவிடில் மற்றைய நற்குணங்களால் ப்ரயோஜநம் ஏதுமில்லை. இதனைக் கருத்திற் கொண்டு அவன் பரம தயாளு எனவும் கருணையும், இரக்கமும் பொறுமையும் ஒருசேர உடையவன். எனவும் கூறி இப்படிப்பட்ட கருணாமூர்த்தியை நாம் திருவேங்கடத்தில் நித்யவாஸம் செய்யும் ஸ்ரீநிவாஸனிடத்திலே காணமுடியும் என்று அறுதியிட்டுக் கூறி அந்த எம்பெருமானின் தயையே நமக்கு பரமபோக்யம். அதுவே நம்மைக் காப்பது, நாம் விரும்புவது என்றெல்லாம் 108 ஸ்லோகங்களினாலே மிக உயர்ந்த குணமான தயையை விவரிக்கிறார் ஸ்வாமி.

எம்பெருமானுடைய இந்த 'காருண்யம்' என்ற குணத்தில் நம் ஆசார்யர்களும் ஆழ்வார்களும் மூழ்கித் திளைக்கின்றனர். ஆழ்வார்களுடைய திவ்ய ஸூக்திகளும் ஸ்ரீதேஶிக ஸூக்திகளும் இதனை நன்கு ப்ரகாஶப் படுத்துகின்றன.

நின்னருளே புரிந்திருந்தேன், ஐயனே ! அரங்கனே உன்னருள் என்னும் ஆசைதன்னால், பொய்யனேன் வந்து நின்றேன், உனதருளே பார்ப்பன் அடியேன், திருமாமகளைப் பெற்றும் என்னெஞ்சகம் கோயில் கொண்ட பேரருளாளன், உன் திருவருளால் அன்று காப்பரிது, பண்டை நாளாலே நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளும். ஆவா! என்றருள் செய்து, க்ருபயா கேவல மாத்மஸாத் குரு என்று பலபடிகளில் பேசிப் போந்தார்கள். கலியுகத் தெய்வமாக எல்லோராலும் போற்றி வணங்கப்படும் ஸ்ரீ திருவேங்கட முடையானின் தயையைப் போற்றும் விதத்தில் நம் ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன் ஆழ்ந்த உட் பொருளான ப்ரபத்தி ஶாஸ்த்ரத்தைப் பற்றித்

தெளிவாக ஆங்காங்கே எடுத்துரைத்து ஸேவிப்போரின் மனதில் நன்கு பதியும்படி விவரித்துள்ளார்.

ஸ்லோகங்களின் மொத்த எண்ணிக்கை 108. மந்த்ரங்களில் மிகவும் உயர்ந்ததான காயத்ரியை நூற்றெட்டு தரம் ஜபித்தால் என்னபலன் உண்டோ அதே பலன் இதனை ஜபிப்ப வர்களுக்குக் கிட்டும். ஒவ்வொரு ஸ்லோகத்தையும் ஒரு நாமாவளியாகக் கொண்டு 108 ஸ்லோகங்களையும் தயா ஶதக நாமாவளி அர்ச்சனை என்று கொண்டாடுபவர்களும் உண்டு. பத்து ஸ்லோகங்கள் ஒரு தஶகம். இம்மாதிரி 10 தஶகங்கள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு வ்ருத்தத்தில் அமைக்கப் பட்டிருப்பது இதன் பொருட்சுவையையும் சொற்சுவையையும் கூட்டுகிறது.

முதல் தஶகத்தில் பெருமாள். பிராட்டிமார்கள், ஆசார்ய பரம்பரை இவற்றை அநுஸந்தித்து ஸ்ரீ திருவேங்கட முடையானை வணங்குகின்றேன் என்றும் நான்கு வித புருஷார்த்தங்களையும் அருளும் ஸ்ரீ ஶ்ரீநிவாஸனின் தயையைத் துதிக்கின்றேன் என்கிறார்.

இரண்டாவது தஶகத்தில், சேதனர்களை தன்னுடைய அளவற்ற பலம், சக்தி, அகடித கடிநா ஸாமர்த்யம் இவைகளினால் நன்கு ரக்ஷிக்கிறான் என்கிறார்.

மூன்றாம் தஶகத்தில் அவனைச் சரணடைந்தவர்களை 'பயிர்' போன்று உருவகப் படுத்தி உழவனானவன் பயிர்களுக்கு ஏற்படும் களை முதலிய தீங்குகளை அவ்வப்போது களைந்தெடுத்துக் காப்பதுபோல, ஶரணாகதர்களின் அபராதங்களை தயையினால் க்ஷமிக்கிறான் என்று கூறுகிறார்.

நான்காம் தஶகத்தில் ஸ்ரீதயா தேவியானவள் ஜநங்களுக்கு ஹிதத்தைப் பண்ணும்படியும் ஆஶ்ரயிக்கத் தகுந்தபடியுமான

ஜந்மங்களை அடையும் படியும் அவனிடம் பேசி நமக்கு எம்பெருமானே உபாயம் எனவும் அவனை எப்பொழுதும் ஸ்மரித்துக் கொண்டேயிருப்பதே பாபங்கள் தொலைவதற்கு வழி என்றும் உணர்த்துகிறார்.

ஐந்தாம் தஶகத்தில் ஜீவர்கள் ஸ்ரீநிவாஸனை தயாதேவிமுலம் ஆஶ்ரயித்து அவனே 'உபாயம்' என்றறிகின்றனர்.

ஆறாவது தஶகத்தில் 'ப்ரபத்தி' என்னும் உபாயம் மிகச்சிறந்தது என்றும் அவனை அடைவதற்கு இதைவிட வேறு சிறந்ததோர் உபாயம் ஏதுமில்லை எனத் தினவடங்கக் கூறி அந்த ப்ரபத்தி ஸித்திப்பதற்காக பல வழிகளில் ஒத்தாசை செய்யும் ஸ்ரீதயாதேவியைப் போற்றுகிறார்.

இனி ஏழாவது தஶகம். மிகவும் மேம்பட்டவனான எம்பெருமான் அவனைவிட கீழானவர்களிடம் வாசியறக்கலந்து பரிமாறும் பாங்கினை பல்வேறு த்ருஷ்டாந்தங்களைக் கொண்டு விளக்குகிறார். குஹன், சுக்ரீவன், குசேலர், கூனி, கோபிகைகள், மாலாகாரர் ஆகியோர்களுடன் மிக்க ஸ்நேக பாவத்துடன் நன்கு பழகிய விதத்தை மேற்கோள்களாகக் காட்டுகிறார்.

எட்டாவது தஶகத்தில், த்ரிவித சேதநாசேதனங்களின் ஸ்வரூப ஸ்திதி ப்ரவர்த்தி இவைகளை எம்பெருமானுடைய தயையே நடத்துகிறாள் என்றும் போகம், அபவர்க்கம் போன்றவகைகளை அளிப்பவளும் அவளே என்றும் ஸகல விதங்களிலும் ஜீவர்கள் கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தைப் பெறுவதற்கு ஏணி போன்று இருக்கிறாள் எனவும். இவளுடைய வார்த்தையை தட்டமுடியாத ஸ்ரீ திருவேங்கமுடையான் நிச்சயம் ரக்ஷித்தே தீருவான் என்று அருளுகிறார்.

ஒன்பதாவது தசகத்தில் எம்பெருமானை பல்வேறு விபவாவதாரங்களை எடுக்கும்படிச் செய்து. அதன் மூலம் லோக ஸம்ரக்ஷணம் செவ்வனே நடக்கும்படி இவளே செய்கிறாள் என்றும் வியப்புடன் பேசுகிறார்.

பத்தாவது தசகத்தில் திருவேங்கடத்து எந்தையாகிய முகுந்தன் இம் மேதினியிலேயே நம்மைப் போன்றவர்களுக்கு மோக்ஷானந்தத்தைத் தரும்படி அநுக்ரஹம் செய்திடவேண்டும் என்று தயா தேவியைப் ப்ரார்த்திக்கிறார்.

இதற்கு மேற்கொண்டு ஸாதித்த எட்டு ஸ்லோகங்களில்

திருவேங்கடமுடையானின் அதிசயத்தக்க பல்வேறு குணங்களுக்கும் தயாதேவி தான் தலைவி. வேதங்களாலும் சொல்ல முடியாதபடி இருக்கும் உன் (தயாதேவி) பெருமையை சிறியவனான நான் (தேஸிகன்) பேசப் புகுந்தது ஸாஹஸ கார்யம் எனிலும் அதை பொறுத்துக் கொண்டு தயாதேவி அருளவேண்டும் என வேண்டுகிறார். விற்பன்னனான ஸ்ரீநிவாஸன் குதூஹலத்துடன் மகரயாழை எடுத்துக் தந்திகளை மீட்டி பாடுவது போல் அடியேனையும் ஒரு பொருட்டாக மதித்து வேதாந்த தேஸிகன் என்னும் பீடத்தில் அமர்த்தி இந்த துதியைப் பாடவைத்தான். இந்த ஸ்தோத்ரம் எம்பெருமானுடைய ஸங்கல்பம் என்னும் கல்ப வ்ருக்ஷத்திலிருந்து தோன்றியது. இதில் குணங்களோ அல்லது குற்றங்களோ கலந்திருந்தாலும், தோஷங்களைப் பிறர் எடுத்துக் கூறினாலும் திருமலையினின்று மிகுந்த ஆரவாரத்தோடு பெருகும் அருவிகளின் ஓசையால் அது யாருடைய காதிலும் விழாது என்று கூறித் தலை கட்டுகிறார்.

10. வரதராஜ பஞ்சாஶத்

ஸ்வாமி ஸ்ரீ தேஶிகனுக்கு காஞ்சியில் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ தேவாதிராஜப் பெருமாள் மீது மிகுந்த வ்யாமோஹம். ஸ்ரீ வரதனின் சோபையையும் திருக்கல்யாண குணங்களையும் அவனுடைய மேன்மையும் நன்கு அநுபவிக்கிறார். தெவிட்டாத தேனமுது இது. பருகுவோருக்கு இதன் ரஸம் புரியும்.

இந்த ஸ்தோத்ரம் ஶாஸ்த்ரம். ஸ்ரீ வரதராஜனே உபநிஷத்துக்களில் அறுதியிட்டுக் கூறப்பட்ட **பரதேவதை**, ஆறு ஸ்லோகங்களால் தத்வம் இவ்வாறு சொல்லப்பட்டது. எம்பெருமானின் ஐந்து நிலைகளான பரம், வ்யூஹம், விபவம், அந்தர்யாமி, அர்ச்சை இவைகளை ஸமந்வயப்படுத்தி நிரூபிக்கின்றார். பின்னர், **ஹிதோபாய**ங்களை பலபடிகளில் பேசி மகிழ்கிறார். முடிவாக ஒன்பது ஸ்லோகங்களால் **புருஷார்த்தத்தைப்** பற்றிக் கூறி பலஶ்ருதியாக ஒரு ஸ்லோகத்துடன் இதனை நிறைவு செய்கிறார் ஸ்வாமி.

முதல் ஸ்லோகத்தால், திருமகளும் திருவடிவும் திருவருளும் தெள்ளறிவும் அருமையிலா அளப்பரிய ஐஶ்வர்யத்தோடு கருணையே வடிவாக உள்ள ஒரு அத்விதீயமான பரம புருஷன் ஸ்ரீ வரதராஜனே என்று கூறி அவன் நமக்கு மங்களங்களை உண்டாக்கட்டும் என்று மங்கள ப்ரார்த்தனையுடன் ஆரம்பிக்கிறார். அவன் பேரருளாளன் என்பது திண்ணம் என நிரூபிக்கப்பட்டது. **கல்ப ஶாகீயாக** (கற்பக வ்ருக்ஷம்) இருக்கிறானாம் வரதன். காரணம்? **கலஶ ஜலதி கந்யா -** திருப்பாற்கடலில் அவதரித்த பிராட்டியாக கொடி படரும் கற்பக மரமாக இருப்பதினாலாம். இவன் ஆதியுகத்து

அயன் கண்ட அருளாளன். கரிகிரி மேல் வீற்றிருப்பவன். காக்கும் இயல்பினன். அயமேத வேள்வியில், பகலோன் பகல் விளக்காகத் தோன்றும்படிச் செய்த பரஞ்சுடர் அன்றோ?

இரண்டாவது ஸ்லோகத்தில் மிகவும் ஸ்வாரஸ்யமான பதம் **''முஹ்யந்தி''** என்பது. ஸ்வாமி நம்மாழ்வார் திருவாய்மொழியை அநுக்ரஹித்த போது சில இடங்களில் ப்ரீதி மேலிட்டு குணங்களில் ஆழங்கால்பட்டு அவ்வநுபவ பரீவாஹத்தால் ''ஆறுமாத காலம் ஆழ்வார் மோஹித்துக் கிடந்தாரே'' என்பர். ரஜோ குணம், தமோகுணம் சிறிதும் கலக்காத ஆழ்வாருக்கு ''மோஹம்'' அப்படி வந்தது? ஏனென்றால், அது தேவப் பெருமாளின் திவ்ய மங்கள விக்ரஹப் பொலிவினால் உண்டானது என்கிறார் ஆசார்யர். இப்படியாக, ஐந்து ஸ்லோகங்களால் உபோத்காத ஸங்கதி. அதற்கு மேல் பகவத் ஸ்தோத்ரம்.

அந்த நாளில் அயமேத வேள்வியைச் செய்த ப்ரஹ்மா, ஒரு ஸுக்ருத விசேஷத்தாலே உன்னை கண்டான். ஆனால் இன்றோ உன் இன்னருளின் காரணமாக அகில லோகமும் உன்னை ஸேவிக்கும் பாக்யம் பெற்றது என்று அநுஸந்தித்து மகிழ்கிறார். ஸர்க்க, ஸ்த்திதி, ப்ரளயங்கள் (படைத்தல், காத்தல், அழித்தல் முதலான கார்யங்கள்) உனது விப்ரம நாடிகை, (விளையாட்டு) நீயே ஸர்வ காரணம். பிரமன், சங்கரன், இந்த்ரன், ஆத்மா ஸர்வம் போன்ற அனைத்துச் சொற்களும் இவற்றிற்கெல்லாம் அந்தராத்மாவான உன்னையேயல்லவா குறிப்பிடுகின்றன. எங்கும் இருப்பதால் நீயே ஸர்வ காரணம். உனது நியந்த்ருத்வம் விலக்ஷணமானது. சாந்தோதிமான உனது ஸ்வரூபத்தை பாக்யவான்கள் தரிசிக்கின்றனர் என்று பர ரூபத்தைப் பற்றிக் கூறி முடிக்கிறார். (15 ஸ்லோகம் வரை)

இதன் பின்னர், நீ ஆனந்த ரூபன் என்று ஸம்போதநம் செய்து அர்ச்சை முதலான பல வ்யூஹ ரூபங்களை ஸ்லோகம் 29 வரை அநுபவித்து மகிழ்கிறார்.

ஸ்லோகம் 30 முதல் 41 வரை ஹிதோபாயங்களைப் பற்றி விவரிக்கிறார். உன்னுடைய நிக்ரஹாஸ்தரத்திற்கு எம்மிடம் பெரிய தொரு ப்ரத்யஸ்த்ரம் இருக்கிறது - அது "அஞ்சலி". நீர் தான் என்னை அழைத்துச் செல்லும் அபங்குரமான ஸேது. உமது கருணை கலந்த த்ருஷ்டி எம்மீது விழவேண்டும். என்னை ரக்ஷித்து உன் பெயரைக் காப்பாற்றிக் கொள். நீ காப்பவனாகையால் உனது ஸங்கல்பம் ஒன்றே போதுமே! வேறு என்ன வேண்டும்? வில்லேந்திவந்து துரிதங்களிலிருந்து என்னை விடுதலை செய். உன் செந்தாமரைக் கண்களினால் என்னைக் குளிர கடாக்ஷிக்க வேணும். யானையை மட்டும் தான் காப்பேன் என்ற வாதம் எதற்கு? உன்னுடைய திருப்பாதார விந்தங்களிலே கைங்கர்யம் பண்ணும்படி அருள் புரிய வேணும் என்று தன்னுடைய ஆர்த்தியையும் ஸமாதானத்தையும் விளக்குகிறார்.

இனி 42ம் ஸ்லோகம் முதல் 50வது ஸ்லோகம் வரை அடையப் போகும் புருஷார்த்தத்தைப் பற்றி விவரிக்கிறார் ப்ரபந்நன் என்கிற ஸ்தானம் மஹாதிகாரம், உன்னுடைய அருளே அடியேனுக்கு மோக்ஷம். உன்னை எப்பொழுதும் நினைந்திருப்பேன். உன்னுடைய ஸம்ஸத் பெரியது. ஆனந்தம் மிக்கது. என்னையும் அநுபவிக்கும்படிச் செய்கிறார்களே! அவர்கள் தான் பாக்யசாலிகள். உன் திருமேனி மரகதமே. ஏகாந்த ஸேவாநுபவம் பற்றி விளக்குகிறார். இந்திரா (பிராட்டி) ஆரத்தழுவுவதனால் உன்னுடைய திருக்கழுத்தில் பதிந்திருக்கிறது அவளுடைய கனக கங்கணங்கள். நீ சேஷ ஸயனத்திலிருந்து சிறுகாலையிலேயே திருப்பள்ளி யுணர்ந்து

அச்சமயம் எழுந்தருளும் கோலம் அடியேனுடைய மனதில் எப்பொழுதும் உறைந்திருக்க வேண்டும். நீயே அருள் புரிய வேணும். ஆச்சர்யமான ஸ்ரீ தேவப் பெருமாளின் ஸுப்ரபாத ஸேவையை ப்ராத்திக்கிறார். எத்தனை வாஹநங்கள்! எத்தனை விதமான ஸேவை !! உன் விபூதியின் பெருமைதான் என்னே!!! உன்னுடைய வடிவழகினை ஸேவிக்கும் எனக்கு வைகுண்ட வாஸத்திலும் விருப்பமில்லையே! மிகவும் கறுப்பானதேவதை. இது தான் புவனத்திற்கு தாயான தேவதை! இதுவே என் மனதில் எப்பொழுதும் நிலைத்து நிற்கவேண்டும். இப்படியாக இந்த ஸ்தோத்ரம் உதாரமாய் ஶ்ருதி ஸுபகமாய் அவதரித்தது. இதை ஸேவிப்பவர்களுக்கு கல்ப வ்ருக்ஷத்திலிருந்து பலம் கையாலேயே பறித்துக் கொள்ளலாம் என்று கூறித் தலைகட்டுகிறார்.

11. ஸ்ரீ காமாஸிகாஷ்டகம்

*ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய அவதாரச் சிறப்பைப் பற்றிக்கூறி அடியார்களை ரக்ஷிப்பதையும் எதிரிகளைத் தொலைப்பதையும் விளையாட்டாக, அனாயாஸமாகச் செய்கிறான் என்பதையும் உபநிஷத்துக்களால் போற்றப்படும் ''**பரம புருஷன்**'' இவனே என உறுதிபடக் கூறுகிறார்.*

இந்த ஸ்தோத்ரத்தில் உபநிஷத்துக்கள் போற்றும் பரம புருஷன் இந்த திவ்ய தேஶத்தில் நரஸிங்கனாய் ஸேவை ஸாதிப்பதைப் பற்றியும், இவன் யோக நிலையில் அமர்ந்த திருக்கோலத்தில் இருப்பதையும் மூன்று திருக்கண்களோடு இருத்தலையும் அவதார ரஹஸ்யத்தில் சொன்னபடி ஸாது பரித்ராணம், துஷ்ட நிக்ரஹம் என்ற இரண்டு கார்யங்களையும் ஒரே ஸமயத்தில் செய்யும் அதிஶயத்தையும் போற்றி இவன் ஸர்வ ரக்ஷகனே என்று முடிக்கிறார்.

காமஸிகா என்று எம்பெருமானுக்குப் பெயர். (காம - ஸங்கல்பத்தால், ஆஸிகா - வீற்றிருத்தல்) ஆழ்வார்களோ, **வேளுக்கை** என்று ஸம்போதனம் செய்கின்றனர். (வேள் - விருப்பம் இருக்கை - வீற்றிருக்கை) ஸ்வாமி காமாஸிகா நரஹரி என்று அழைக்கிறார். அன்றியும் காமாந் ஆதநுதாத் (ஸ்லோகம் - 5) விதநோது காமாந் (ஸ்லோகம் - 9) என்று விசேஷித்துக் கூறியபடியால், ஆஶ்ரிதர்களுடைய விருப்பங்களைப் பூர்த்தி செய்பவன் என்று கொண்டாடுகிறார்.

மொத்தம் ஒன்பது ஸ்லோகங்கள். (பலஶ்ருதி உட்பட) நவரத்னங்கள் போல் ஸ்லோகங்கள் மிளிர்கின்றன.

தாப நீய ரஹஸ்யாநாம் என்கிற பதம் அதியத்புதம். இந்த எம்பெருமானின் மூன்று கண்களும் தாபத்ரயங்களைத் தொலைப்பவை.

சிங்கம் ஸாதரணமாக காட்டில் குஹைகளில் இருக்கும். இந்த சிங்கமோ வேகவதி ஆற்றின் மணற்பரப்பிலே விளையாடிக் கொண்டிருக்கிறது என்று தன்னுடைய ஆச்சர்யமான அநுபவத்தைக் கூறி மகிழ்கிறார் ஸ்வாமி.

க்ருபா கபட கேஸரிந் என்று கூறி ந்ருஸிம்ஹன் கூட கபடனா? என்று வியக்கிறார். அப்பனை அழிக்கிறான். மைந்தனை மடியில் வைத்துக்கொண்டு தன்னுடைய குளிர்ந்த கடாக்ஷத்தைப் பொழிகிறான். இவை என்ன விசித்ரமோ? என்று பாடிப் பரவஶமடைகிறார்.

எட்டாவது ஸ்லோகம் – **த்வயி ரக்ஷதி** – ஆழ்ந்த உட் பொருள் கொண்ட அத்புத ஸ்லோகம். எம்பெருமான் ஒருவனைக் காக்க முற்பட்டுவிட்டால் அதைத் தடுக்க யாரால் முடியும்? அதேபோல் ஒருவனைத் தண்டிக்க முற்பட்டு விட்டால் மற்றைய தெய்வங்களை நாடுவதில் தான் என்னை பயன்? ஒன்றும் நடவாது. நமக்கு இந்த நரசிங்கப் பெருமானே கதி என்று திடமான மனதுடன் அவனை ஆஶ்ரயித்து விரும்பிய பலன்களைப் பெறுங்கோள் என்று பலஶ்ருதி ஸ்லோகத்தில் உபதேஶிக்கிறார்.

12. வைராக்ய பஞ்சகம்

*ஸ்வாமி ஸ்ரீதேஸிகன் அருளிய பஞ்சரத்ன ஸ்லோகங்கள் வைராக்ய பஞ்சகம். **சிறிய கண்ணாடி பெரிய உருவைக் காட்டுமாப் போலே** சிறிய ஸ்தோத்ரமான இது சீரிய பொருளை விளக்கிப் பேசுகிறது.*

வைராக்யத்தை ப்ரதான விஷயமாகக் கொண்டதால் இந்த ஸ்தோத்ரம் இப்பெயர் பெற்றது. வித்யாரண்யரைத் திருத்திப் பணிகொண்ட வ்ருத்தாந்தம் இந்த ஸ்தோத்ரம்.

ஸ்வாமி ஜ்ஞாந வைராக்ய பூஷணம் என்பதை அறிய இந்த ஸ்லோகங்களே போதுமானது. அஸ்மதாசார்யன் இவ்வாறு ஸாதிப்பதுண்டு ''அடியேனுக்குத் தெரிந்தவரை **குசேலரை முனிவர்** என்றழைத்த மஹான் ஸ்வாமி ஸ்ரீ தேஸிகன் ஒருவரே! என்று பெருமையுடன் ஸாதிப்பார்.

நாக்கொண்டு மானிடம் பாடேன் என்ற ஆழ்வார்களின் ஸங்கல்பத்திற்கு ஏற்ப அற்பர்களை ஒரு நாளும் போற்றி துதி செய்யேன் என்றும் ஒருநாளும் எந்தக் காரணத்திற்காகவும் அவர்களிடம் எதையும் யாசிக்க மாட்டேன் என உறுதிபட எடுத்துரைக்கிறார்.

நான்காவது ஸ்லோகத்தில் **தநம்** என்ற சொல்லினை 11 முறை உபயோகித்திருக்கும் கவியின் ஸாமர்த்யத்தை ரஸிக்கவும்.

சிலேடையாக அமைந்தது கடைசி ஸ்லோகம். பிதாமஹன் என்றால் **பாட்டன்** என்று ஒரு பொருள், பிரம்மன் என்று ஒரு பொருள். ஸ்வாமியின் கவி நயத்துக்கு இந்த ஸ்தோத்ரம் ஒன்றே போதுமே!

பேரருளாளனே பரதத்வம். அவனைப் போற்றி அவனைச் சரண் அடைவதே சிறந்த உபாயம். அவனை அநுபவித்து மகிழ்வதே பரம புருஷார்த்தமாகும். தயா நிதியான அவனன்றோ **''நீங்காத செல்வம்''** என்று விளக்கி முடிக்கிறார்.

13. வேகாஸேது ஸ்தோத்ரம்

எம்பெருமான் ஆஶ்ரித பக்ஷபாதி. தன்னடியார்க்கு இனியன், அவர்கள் சொன்னபடி நடப்பவன். பக்த பராதீனன். இவ்வுண்மைகளை எல்லாம் தெளிவாகக் கூறும் துதி நூலிது.

காஞ்சீபுரத்தில் வேகவதி என்னும் நதிக்கு அணையாகப் பள்ளி கொண்ட எம்பெருமானைப் பற்றிய ஸ்தோத்ரமிது. திருவெஃகா என்று திவ்ய தேஶத் திருநாமம். **வெஃகாவில் துயிலமர்ந்த வேந்தே!** என்று ஆழ்வார் மங்களாஶாஸநம். பிரமனின் அயமேத வேள்வியைக் காத்த பெருமான். திருமழிசை யாழ்வார் விரும்பிக் கேட்டுக் கொண்டபடி நடந்ததால் இவர் **''சொன்ன வண்ணம் செய்த பெருமாள்''** என்ற பேற்றினைப் பெற்றார். வடமொழியில் **யதோக்தகாரி** என்ற திருநாமமும் வந்தது.

உபாயமும் பலனுமாக நின்று இந்த எம்பெருமான் ஒருவனே அனைவரையும் அனைத்துலகங்களையும் ரக்ஷிக்கிறான். **''காஞ்சீ பாக்யம்''** என்று தொடங்கும் ஒன்பதாவது ஸ்லோகம் அர்த்தபுஷ்டி மிக்கது.

இந்த எம்பெருமானின் அவதார விசேஷத்தால் காஞ்சீ மண்டலமே பாக்யம் வெற்றது. இவன் கருணைக்கடல் பிராட்டியின் திருவுள்ளம் பூரணமாக ஸித்தி பெற்றது. இவன் ஸகல கல்யாண குணங்களுக்கும் இருப்பிடமானவன். குறையொன்றும் இல்லாத கோவிந்தன். உலகங்களை காக்கும் காரணபுருஷன். இப்படி பல பெருமைகளுடைய பெருமான் தானே ஒரு திருவணையாகி பாம்பணையை அழகு செய்து கொண்டு உறங்குவான் போல் யோகு செய்கின்றான் என்று கூறி முடிக்கிறார்.

14. ஶரணாகதி தீபிகா

> *ப்ரபத்தி ஶாஸ்த்ரத்தைப் பற்றி தெள்ளத்தெளிவாகக் கூறும் ஸ்தோத்ரம்*

திருத்தண்கா என்றழைக்கப்படும் திவ்யதேஶம். ஸ்வாமி நம்மாழ்வாரும், கலியனும் மங்களாஶாஸநம் பண்ணின திவ்ய தேஶம். இங்கே ஸேவை ஸாதிக்கும் பெருமாள் – **தீப ப்ரகாஶன்** - விளக்கொளி எம்பெருமான்.

இந்த எம்பெருமான் விஷயமாக அருளிச் செய்த ஸ்தோத்ரமே **ஶரணாகதி தீபிகை**. ஶரணாகதியைப் பற்றி விளக்கும் விளக்காய் அமைந்தபடியால் இப்பெயர் பெற்றது. இந்த ஸ்தோத்ரத்தின் கருத்துக்கள் அனைத்தும் நமக்கு ஶரணாகதி விஷயமாக ஏற்பட்டிருக்கும் ஸகல ஐயப் பாடுகளையும் நீக்கும். இருளை – அஜ்ஞாநத்தைப் போக்கும்.

ஆரம்ப ஸ்லோகமே மங்கள ஸ்லோகம். **யதீஶ்வர மஹாநஸ ஸம்ப்ரதாயம்** என்கிற மிக உயர்ந்த, மதிப்புமிக்க பூஜிக்கத்தகுந்த ஸம்ப்ரதாயம் நம் ஸம்ப்ரதாயம் என்றும் **யதிவரனார்** (ஸ்ரீ பாஷ்யகாரரால்) **மடைப் பள்ளி வந்த மணம் எங்கள் வார்த்தையுள் மன்னியது** என்றும் அழகாக ஸாதிக்கிறார். மொத்தம் 59 ஸ்லோகங்கள். முக்யமான ஸ்லோகங்களையாவது மனனம் செய்வது நல்லது. இருள் அகலும், ஜ்ஞாநம் வ்ருத்தியாகும். ஒரு ஸமயம் சில பெரியோர்கள், ஶரணாகதி - ப்ரபத்தியைப் பற்றி நன்கு தெரிந்து கொள்வதற்கு ஹேதுவாக ஒரு ஸ்தோத்ரத்தை அருளும்படி ப்ரார்த்தித்தற்கு இணங்க, இதனை நம் ஸ்வாமி அருளிச் செய்ததாக பெரியோர் பணிப்பதுண்டு.

ஸ்தோத்ரத்தில் நாம் காணும் தத்வார்த்தங்கள் மற்றும் விஷயங்களெல்லாம் கீழே விளக்கப்பட்டு இருக்கின்றன.

பிராட்டியின் அவதாரம், எம்பெருமானே பர தேவதே. **அவனே ப்ரதமாசார்யன்.** அவன் **அனந்த கல்யாண குணரூபன்.** அவனுடைய முதன்மையான குணங்கள் - ஆறு. அவனுடைய அவதார ரஹஸ்யத்தின் மேன்மை, ப்ரபத்தியின் பெருமை, அதன் அங்கங்கள், ப்ரபந்நனின் உத்தர க்ருத்யம், ஸ்ரேஷ்டமான பாகவத கைங்கர்யம், ஜீவன் மூர்த்தந்ய நாடியால் வெளியேறும் விதம், அர்ச்சிராதி மார்க்கம். முக்த தசையில் **''பரமம் ஸாம்யம் உபைதி''** என்றபடி எம்பெருமானோடும் நித்ய முக்தர்களோடும் கலந்து பரிமாறி பேரானந்தம் பெறுவது, இவை அனைத்தையும் அழகாக விளக்கி ஸ்தோத்ரத்தைத் தலைக் கட்டுகிறார்.

15. அஷ்ட புஜாஷ்டகம்

எம்பெருமான் ப்ரபந்நர்களுக்கு நல்ல வழிகாட்டி. அவனே மார்க்க பந்து. வழித்துணைப் பெருமாள். ஶரணமடைந்தவர்களை காப்பாற்றியே தீருவேன் என்னும் அவன் ஆர்வத்திற்கொப்ப அவன் திருத்தோள்கள் இரண்டு மடங்காயிற்றாம். கலியனின் அநுபவமும் மிக்க ரஸோக்தியாக இருக்கும். அரியுருவாம் இவரார் கொல்? அந்தணர் போன்று இவரார் கொல்? அம்புதம் போன்று இவரார் கொல்? அஞ்சுடர், அலைகடல், அங்கனம், அழகியான் என்று பல படிகளில் பாடிப் பரவஶமடைவதையும் கருத்தில் கொள்க.

ஸ்ரீ காஞ்சியில், அட்டபுயகரம் என்று வழங்கும் திருத்தலத்து எம்பெருமான் விஷயமாக அருளிச் செய்யப்பட்ட ஸ்தோத்ரம்.

ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன், இந்த எம்பெருமானிடம் ஸ்வாமி நம்மாழ்வார் திருவேங்கடமுடையானிடம் வேண்டியதைப் போல ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி, வழுவிலா அடிமை செய்ய ப்ரியப்படுகிறார்.

எட்டு திருக்கைகளை உடைய பெருமாள். அத்திருக்கை களுக்கு எட்டு ஸ்லோகம். பலஶ்ருதியாக இரண்டு மொத்தம் 10.

வாரணம் அழைக்க வந்த காரணனே என்று **மும்மணிக் கோவையில்** அநுபவம். அது இங்கும் தொடர்கிறது. முதல் ஸ்லோகத்திலேயே, கஜேந்திரன் என்கிற யானையை ரக்ஷிப்பதற்காக, அந்த யானை **மூலம் என ஓலமிட** வந்தவன் அல்லவா நீ! அங்காவது ஒரு முதலை. இங்கே ஸம்ஸார மண்டலத்திலே பல முதலைகள். எனவே, அடியேனை ரக்ஷிக்க

அப்பொழுது வந்த அந்த வேகத்தைக் காட்டிலும் இன்னும் அதி வேகமாக வந்து காக்க வேண்டும் என்கிறார்.

ஐந்தாவது ஸ்லோகம் அத்புதம் என்னுடைய பயம் தவிர்க்க உம்மைத் தவிர வேறு சரண் இல்லை. உன்னுடைய அருள் / க்ருபையிருந்தால், எனக்கு பயம் வேறு யாரிடமிருந்து வரும்? அப்படியே நீ கோபப்பட ஆரம்பித்து விட்டால், என்னைக் **காப்பார் ஆர் இனி?** (ஸ்ரீமத் இராமாயண காகாஸுர வ்ருத்தாந்தத்தை நினைவில் கொள்க).

இனி கடைசி ஸ்லோகத்தில் ஸாதாரணமாக எம்பெருமானுக்கு நான்கு திருக்கைகள். இந்த எம்பெருமான் ஶரணாகதர்களைக் காப்பதில் மிகுந்த த்வரையுடையவன். ஆகையால் திருக்கைகள் இரட்டித்தன, கைகள் ஆயுதங்களை ஏற்பதைக் காட்டிலும், இந்த ஸ்லோகங்களை ஏற்கட்டும் என்று ரஸமாக அநுபவித்து முடிக்கிறார்.



16. பரமார்த்த ஸ்துதி

வழக்கம் போல் இந்த ஸ்தோத்ரத்திலேயும் ஶரணாகதி ஸம்ரக்ஷணத்தைப் பற்றி விரிவாகக் கூறும் துதி நூல்.

காஞ்சீபுரத்துக்கு அருகாமையிலுள்ள திருப்புட்குழி என்கிற திவ்ய தேஶத்து எம்பெருமான் விஷயமாக இந்த ஸ்துதி. **''எம் போரேறு''** என்று பெரிய திருமடலில் கலியனின் அநுபவம், அதை யொட்டி, ரணபுங்கவன், ஆஹவ புங்கவன் என்றெல்லாம் இந்த துதியில் ஸம்போதநம் செய்கிறார் ஸ்வாமி. இந்த ஸ்தோத்ரத்தின் அமைப்பு அலாதியானது.

அரவிந்த லோசனான எம்பெருமான் பரமார்த்தம், அவனைவிட்டு க்ஷண காலமும் அகலாத அலர்மேல்மங்கை பரமார்த்தம். இத் திவ்ய தம்பதிகளின் திருவடிகளிலே நாம் செய்யும் ஶரணாகதி, பரமார்த்தம். இவர்கள் மூலம் நாம் அடையும் பரம புருஷார்த்தமும் பரமார்த்தம். இவைகளை விஷயமாகக் கொண்ட இந்த ஸ்தோத்ரமும் பரமார்த்தம்.

இந்த ஸ்தோத்ரத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட ப்ரதாந விஷயம் ஶரணாகதி ஸம்ரக்ஷணமே. ஒவ்வொரு ஸ்லோகமும் ஆச்சர்யமான கருத்துக்களை விளக்குகின்றன.

இப்புஸ்தகம் வெளியிடப்படும் இடம் கடற்கரை ஸ்தலம். எட்டாவது ஸ்லோகத்தை ஸேவித்து ரஸியுங்கள்.

ஶரணமடைந்தவர்களை ரக்ஷிப்பதை தன்னுடைய வ்ரதமாகக் கொண்டுள்ளான் எம்பெருமான். **(ஏதத் வ்ரதம் மம:)** இந்த கடற்கரையிலே, இராமாவதார காலத்தில், விபீஷணனைக் காப்பாற்றும் பொருட்டு காகுஸ்த்தனான ராமன், ''ஸுக்ரீவ! வந்தவன் விபீஷணனாயிருப்பினும் அல்லது குற்றம் புரிந்த இராவணனே யாயினும் அழைத்துவா! இவனுக்கு என்னால்

அபயமளிக்கப் பட்டது'' என்கிற உன்னுடைய கடற்கரைப் பேச்சு உலகெங்கிலும் மிக்க ப்ரஸித்தியன்றோ!

ஸ்வாமி ஸ்ரீ பராசர பட்டரும் சிஷ்யனாக வந்த ஒரு அரசனிடம், ''நீ எப்பொழுதும் கடற்கரையை நினைத்துக் கொண்டிரு'' என்று ஸூசகமாக ஶரணாகதி தர்மத்தைப் பற்றிய நினைவு எப்பொழுதும் மறக்காமலும் கருணா காகுத்ஸ்த்தனான ஸ்ரீ ராமபிரானையும் நினைத்துக் கொண்டிரு என்று பகர்ந்தார்.

ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன் ப்ரபந்நர்களான நமக்கு ஒரு புத்திமதியைக் கூறுகின்றார், கடைசி ஸ்லோகத்தில். அது என்ன? ப்ரபந்நர்கள் ச்ரத்தையுடன் இந்த ஸ்துதியை தினந்தோறும் பாராயணம் செய்ய வேண்டும் என்று விரும்புகிறார். **(பரமார்த்த ஸ்துதி ரந்வஹம் ப்ரபந்நை:!!)** ஸ்வாமியினுடைய அபிலாஷையைப் பூர்த்தி செய்ய வேண்டியது, சிஷ்யர்களான நம்முடைய கடமையன்றோ? என்று கூறி, அடுத்த ஸ்தோத்ரத்தைப் பார்ப்போம்.

17. ந்யாஸ தஶகம்

ப்ரபத்தி ஶாஸ்த்ரத்தைப் பற்றி சுருக்கமாகக் கூறும் துதி நூல்.

ஸ்வாமி ஸ்ரீ தேஶிகனால் அருளிச் செய்யப்பட்ட ஶரணாகதி ஸ்தோத்ரங்களில் **ந்யாஸ தஶகம்** என்னும் இந்த ஸ்தோத்ரம் **நெடுவரையின் உச்சி மேல் நிற்பதாம்**, இதற்கு நிகர் இதுவே.

இது முழுக்க முழுக்க ப்ரபத்தி ஶாஸ்த்ரத்தைப் பற்றி கலக்கமற விளக்கும் துதி நூல். ஸ்ரீ பேரருளாளன் விஷயம். தமிழிலும் ஸ்வாமி **அடைக்கலப் பத்து** என்ற பெயரில் ஒரு ப்ரபந்தம் அருளிச் செய்திருக்கிறார். இதன் மேன்மையை மிக உணர்ந்து பெரியோர்கள் திருவாராதனக் காலத்தில் இதனை வெகு காலமாக அநுஸந்தித்து வருகின்றனர். **அஹம்** என்று தொடங்கி **நிர்ப்பர:** என்று முடித்திருப்பது மிகவும் ரஸம். பத்து ஸ்லோகங்களால் தெள்ளத் தெளிவாக ஶரணாகதி செய்யும் முறை, ப்ரபத்திக்கான ஐந்து அங்கங்கள், ஸாத்விக த்யாகத்தின் அவஶ்யம், மோக்ஷத்தை ப்ரார்த்தித்தல், இங்கிருக்கும் நாள் வரை எம்பெருமானிடம் கைங்கர்யத்தை அபேக்ஷித்தல் ஆகியவைகளை விவரிக்கிறார். ஸ்ரீ வைஷ்ணவர்கள் அவஶ்யம் தினந்தோறும் அநுஸந்திக்க வேண்டிய ஸ்தோத்ரமிது.



18. ரகுவீர கத்யம்

சக்ரவர்த்தி திருமகனின் வீரதீரச் செயல்களையும் அவன் கொண்டிருந்த வ்ரதத்தையும் பற்றி பாலர்களுக்கும் புரியும் எண்ணம் ஸங்க்ரஹ ஸம்பூர்ண இராமாயணமாக இதனை அருளிச் செய்திருக்கிறார். ஶரணாகதியின் மேன்மையே பேசப் படுகிறது.

திருவஹீந்த்ரபுரத்தில் கோயில் கொண்டுள்ள சக்ரவர்த்தி திருமகன் விஷயமாக ஸ்வாமி ஸ்ரீ தேஶிகனால் ஸாதித்தருளப் பட்ட கம்பீரமான கத்யம் இது. சக்ரவர்த்தி திருமகனின் குணாநுபவத்தில் இழியாதார் எவர்? அவன் **மனத்துக்கினியவன். கற்பார் இராமபிரானையல்லாம் மற்றும் கற்பரோ?** என்று நம் குலபதியின் பாரிப்பு.

வீரர்களுக்குள்ளே மஹாவீரன் இவன். அவனுடைய சரித்ரத்தைக் கூறுவதால்- வைபவத்தை விளக்கிக் கூறியதால்- **இது மஹாவீர வைபவமானது. கடோர ஸுகுமார கும்ப கம்பீரம்** என்று தாமே வியந்து பேசும் ஸ்தோத்ரமிது. இது ஒரு சிறிய ஸங்க்ரஹ ஸம்பூர்ண இராமாயணம். **''பவ பய பேஷஜம்''**. இது என்கிறார் ஸ்வாமி. பிறவி என்றும் பெரு நோய்க்கு இந்த ஸ்தோத்ரம் அருமருந்து.

ஜயதி என்று தொடக்கம். ஜய ஜய என்று மங்களாஶாஸநம். நமஸ்தே புனஸ்தே நம: என்று அவனையே பின்னர் வணங்குகின்றார். நாச்சியாரும் **''சென்றங்கு தென்னிலங்கை செற்றாய், திறல் போற்றி** என்றே மங்களாஶாஸநம் செய்கிறார்.

அத்புதமான இந்த ஸ்தோத்ரத்தில் இல்லாதது எது? ஸப்த காண்டங்களில் காணும் ஸகலவிதமான கருத்துக்களையும் ஒன்று கூட விடாமல் ஸ்வாமி சுருக்கமாக ரஸோக்தியாக

ஸாதிக்கிறார். இது ஸ்வாமிக்கே உரித்தான தனிப் பண்பு. உதாஹரணமாக, காண்டங்களிலே மிகவும் முக்யமான **ஸுந்தர காண்டத்தை** ஸ்வாமி ஒரே சூர்ணிகையில் **அபார பாராவார பரிகா...... ஸர்வஸ்வநாந** என்று அழகாக ஸாதிக்கிறார்.

இது போலவே, ஸ்வாரஸ்யமான இடங்கள் பல உண்டு.

ஸ்ரீ ஸீதா தேவியின் திருமண விஷயத்தை ஸ்வாமி எவ்வாறு அநுபவிக்கிறார் தெரியுமா? **மோசித ஜநக ஹ்ருதய சங்கா தங்க!** என்கிறார். ஹே! ராமபிரானே! ஜநக மஹாராஜனின் திருவுள்ளத்தில் இருந்த வேதனையைப் போக்கி யருளினாயே! என்கிறார்.

பாலகாண்டம் சூர்ணிகை **திவிஷ ததிபதி...**

சரம ருண விமோசந! ஒரு மனிதன் பிறக்கும் பொழுதே மூன்று விதமான ருணம்– கடன்களுடனே பிறக்கிறான் என்கிறது ஶாஸ்த்ரம். ஸ்ரீ இராமன் அவதரித்தனால், ராஜா தஶரதன் தன்னுடைய மூன்று கடன்களையும் கழித்தார். தேவேந்திரனுக்குச் செய்த ஸஹாயத்தினால் தேவர்கள் கடன் தீர்ந்தது. வேதங்களைக் கற்று யாக யக்ஞங்களைச் செய்து முனிவர்களுக்கான கடனைக் கழித்தார். தற்போது இராமன் அவதரித்ததால் தன்னுடைய பித்ருக்கள் கடனையும் தீர்த்தார்.

அயோத்யா காண்டம் சூர்ணிகை 25 ப்ரணத பரத..... ஸர்வ லோக யோக க்ஷேம!

சித்ரகூட மலைக்கு வந்து உன்திருவடியில் சிரம் தாழ்த்தி வணங்கிய பரதனுக்கு நீ பாதுகைகளை ஈந்தாய். அவனும் அப்பாதுகைகளுக்கு பட்டாபிஷேகம் செய்வித்து தான் அதனின் பணியாளன் என்ற எண்ணத்துடன் இராஜ்ய பாரம் பண்ணினான்.

நடப்பது பாதுகா ஸாம்ராஜ்யம். இதனால் ஸர்வலோகங்களுக்கும் க்ஷேமம் உண்டாயின என்கிறார். ஸூக்ஷ்மார்த்தமான அர்த்தங்கள்- இவன் (ஸ்ரீராமன்) தன் ஒருவனுடைய பட்டாபிஷேகத்தை மட்டும் தவிர்த்தானேயொழிய, தனக்கு சேஷ பூதர்களான ஸ்ரீ பரதாழ்வானுக்கும் பாதுகைகளுக்கும் பட்டாபிஷேகம் நடைபெறும்படி செய்த மஹானல்லவா? என்று வியக்கிறார்.

இவை போலவே பல அத்யாச்சர்யமான சூர்ணிகைகள்.

தண்டகா தபோவந ஜங்கம பாரிஜாத!
(காட்டிலே நடமாடும் பாரிஜாத மரம்)

ஸக்ருத் ப்ரபந்ந ஜந ஸம்ரக்ஷண தீக்ஷித!
(ஶரணமடைந்தவனை எக்காலமும் விடாத வ்ரதம் பூண்டவனே)

ப்ரதிஜ்ஞார்ணவ .... பரத மநோரத ஸம்ஹித ஸிம்ஹாஸநாதி ரூட!
(அயோத்தியில் ராஜ்ய பட்டாபிஷேகம் பண்ணிக் கொண்டு ஸிம்ஹாஸனத்தில் தான் ஏறுவதற்கு முன் பரதனுடைய மனது என்னும் ஸிம்ஹாஸநத்தில் ஏறி அமர்ந்தவனே)

குஶலவ பரிக்ருஹீத குல காதா விஶேஷ!

அஶ்வமேத மஹாமண்டபத்தில் உன்னுடைய புதல்வர்களான குஶலவர்கள் ஸ்ரீமத் இராமாயணத்தை கானம் பண்ணினார்கள். அதனால் மனம் மகிழ்ந்தவனே! என்கிறார். ஸ்வாபதேஶ அர்த்தம்- இராமன் தன்னுடைய கதையைக் கேட்கவில்லை. தன்னுடைய குலப் பெருமையையன்றோ கேட்டான், என்று ஸ்வாமியின் நிர்வாஹம். இப்படிப் பல ரஸோக்தியான விஷயங்கள்.

19. அச்யுத பமதகம்

எம்பெருமானின் ஸ்வரூப ரூப குணங்களையும் ஸித்தாந்த அர்த்தங்களையும் விளக்கமாக செவிக்கினிய அமுத மொழியான பிராகிருத மொழியிலே ஆச்சர்யமாக அநுக்ரஹிக்கப்பட்ட படைப்பு.

ஸ்வாமி ஸ்ரீதேஶிகன் திருவஹீந்த்ரபுரத்தில் எழுந்தருளியுள்ள அடியவர்க்கு மெய்யனான ஸ்ரீ தேவநாதனைப் பற்றி நாயிகபாவத்தை ஏறிட்டுக் கொண்டு ப்ராக்ருத பாஷையிலே (பாலர்களும் பெண்களும் பேசுகின்ற ஸம்ஸ்க்ருத கொச்சை மொழி) நூறு ஸ்லோகங்களால் அநுக்ரஹித்த ஸ்தோத்ரம்.

ஆழ்ந்த பொருள்களையும் அநேக ஶாஸ்த்ரார்த்தங்களையும் விசதமாக கூறும் துதி நூலாகும் இது. பெண் தண்மையை ஏறிட்டுக் கொண்டதால், பெண்களுக்கே உரித்தான அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு ஆகிய தன்மைகள் ஆங்காங்கே ஸ்லோகங்களில் மிளிருவதை ரஸிக்கலாம்.

ப்ராக்ருத பாஷையில் வேதாந்தார்த்தங்களை அழகாக படிப்போர் மனம் கவரும்வகையில் அருளுகிறார். பாஷை தான் ப்ராக்ருதம், விஷயங்களோ அப்ராக்ருதம்.

முதல் ஸ்லோகத்தில், எம்பெருமானை யானையாக அநுபவிக்கிறார். **பஞ்சாஶத்திலும்** (ஸ்லோகம் 52) **கந்த ஹஸ்தீவ தீவ்யந்** என்று அநுபவம். தமிழ் ப்ரபந்தமான **மும்மணிக் கோவையிலும் வாரணம் அழைக்க வந்த காரணனே!** என்கிறார். ஏனெனில் ஸ்வாமி **கலியன் உரை குடி கொண்ட கருத்துடையவரன்றோ? தென்னானாய்! வடவானாய்** என்று மங்கைமன்னனின் அநுபவம்.

ஸ்ரீ தேவநாதன் என்றும் அடியவர்க்கு மெய்யன் என்றும், தாஸ ஸத்யன் என்றும் அச்சுதன் என்றும் வழங்கப்படும் இவன் பெருமை தான் என்னே! பல ஸ்லோகங்களினால் எம்பெருமானின் பெருமைகளைப் பேசிப் போந்தார். ஸத்யம் ஜ்ஞாநம் அனந்தம் ப்ரஹ்ம என்ற அஸாதாரணமான தன்மைகள் இவனிடம் இருந்தாலும், அது இவனுடைய பெயரினாலேயே நன்கு புலப்படுகின்றதன்றோ! (தாஸ ஸத்யன்) இப்படி வேதங்களினால் போற்றும் பிரான் இவன்.

மேலும், இந்த ஸ்தோத்ரத்தில்

1. இவன் ஜகத் காரணன்
2. இவன் ஸர்வ லோக ஶரண்யன்
3. இவனுக்கு ஒத்தாரும் மிக்காரும் யாரும் இல்லை.
4. ஶரண்யனாபடியால் ஸர்வ ஶரணாகதியை அவனிடம் செய்யுங்கோள்!
5. எல்லா ஆஜ்ஞா கைங்கர்யங்களும் அச்சுதனான இந்த பகவானின் ஆராதன ரூபம்.
6. ஸர்வஶப்தவாச்யன் இவனே (உபயலிங்க பூயஸ்த்வாதி கரணம்)
7. அனைவருக்கும் அந்தர்யாமியாய் உள்ளான்
8. இவனே முகுந்தன். மோக்ஷத்தைப் ப்ரார்த்தித்தால் அதனை அளிப்பவன்.
9. தெவிட்டாத தேனமுது இவனுடைய ஸ்வரூபம்.
10. ஸாது ஜந ஸம்ரக்ஷணத்திற்காக பல அவதாரங்களை தன் இச்சையானால்/ஸங்கல்பத்தினால் செய்பவன்.

11. முஹ சந்த என்ற 34வது ஸ்லோகம் தொடங்கி பதினொரு ஸ்லோகங்களால் எம்பெருமானின் திருமேனி திருஅவயவயங்கள் முதலியவற்றை வர்ணிக்கிறார்.

12. பின்னர் ப்ரபத்தியின் ஏற்றத்தையும், சிறப்பையும் அர்ச்சிராதி மார்க்க விசேஷங்களையும் நன்கு விளக்குகிறார்.

இப்படி ஶரணாகதியின் மேன்மையை வெகு அழகாக எடுத்துரைத்து இந்த ஸ்தோத்ரத்தை அநுஸந்திப்பார்களுக்கு ஹேமாப்ஜ நாயிகா ஸமேத ஸ்ரீதேவநாதனின் பரிபூர்ண அநுக்ரஹமும் மோக்ஷானந்தமும் நிஶ்சயம் ஸாத்யம் என்று கூறி முடிக்கிறார்.

20. ஸ்ரீ தேவநாயக பஞ்சாசத்

ஸ்ரீ பாஷ்யத்தில் நன்றாக நிரூபணம் செய்யப்பட்ட பல ஸூத்ரங்களுக்கு விளக்கமாக அமைந்திருக்கிறது இந்த ஸ்தோத்ரம்.

மூவராகிய ஒருவன் ஸ்ரீதேவநாதன். திருவஹீந்த்ராபுரம் என்ற திவ்யதேஸத்தில் நித்யவாஸம் செய்பவன். இவ்வெம்பெருமான் மீது ஆராத காதல் ஸ்ரீ தேஶிகனுக்கு. இவர் விஷயமாக அருளிச் செய்த 53 ஸ்லோகங்கள் இந்த ஸ்தோத்ரம். இந்த எம்பெருமானை பலவகையான திருநாமங்களால் தேவாதி நாதன், தேவ நாயகன், பணிபுதிபுரநாதன், தாஸ ஸத்யன், அமராதிபதி, அஹிபுரந்தர நாதன், த்ரிதஶ நாயகன், விபுத நாதன் என்று போற்றுகிறார்.

1. முதல் ஸ்லோகம் மங்களாசரணமாய் அமைந்துள்ளது. புண்டரீகாக்ஷனான, பரமபத நாதனான இந்த தேவநாதனை ப்ரஹ்ம ருத்ராதிகள் வணங்குகின்றனர். இவனே நமக்கும் ரக்ஷகன் என்கிறார்.

2. இரண்டாவது ஸ்லோகம் குருபரம்பரைத் துதியில் ஸேவிப்பது போல 'தேவாதி நாத' என்று அவரோஹண க்ரமத்தில் அருளிச் செய்த ஆசார்ய பரம்பரையை வணங்குகிறார்.

3. மூன்றாவது ஸ்லோகத்தில் மஹரிஷியான ஸ்ரீ வால்மீகி போன்றோரை ஸேவிக்கிறார்.

4. நான்காவது ஸ்லோகத்தை ''மாதஸ்த்வம்'' என்று அவனுடைய திவ்யமஹிஷியான ஸ்ரீ ஹேமாப்ஜ நாயகியான பிராட்டியைப் பற்றுகிறார்.

5. ஐந்தாவது ஸ்லோகத்தில் நைச்யாநுஸந்தானம். 6வது ஸ்லோகத்தில் இவன் அடியவர்க்கு மெய்யன்- **தாஸேஷு ஸத்ய** எனப் போற்றிப் புளகாங்கிதம் அடைகிறார்,

6. ஸ்ரீ தேவநாதனுடைய ஆக்ஞையையும் தாம் அதிலே பெருமை கொள்வதையும் விளக்கிப் பேசுகிறார், அடுத்த மூன்று ஸ்லோகங்களால்.

7. இனி 10வது ஸ்லோகத்தில் அவன் **பரம புருஷன்** என்றும் நித்யமாக ப்ரம்ஹாசலத்தில் எழுந்தருளி ஆஶ்ரிதர்களை அநுக்ரஹிக்கிறார் எனவும் இவனை ஸேவிக்கும் பக்தர்கள் பாக்யசாலிகள் அவர்களே பூசுரர்கள்- நிலத்தேவர்கள் எனவும் ஸகல தத்துவங்களும் அவனுடைய திருமேனியில் அஸ்த்ரங்களாகவும் அணிகலன்களாகவும் விளங்குகின்றன என்கிறார்.

8. அடுத்தாற் போல் முப்பதுக்கும் மேற்பட்ட ஸ்லோகங்களால் எம்பெருமானுடைய திருமேனியையும், திரு அவயவங்களையும் விசதமாக வர்ணிக்கிறார்.

9. எம்பெருமானை அடைவதற்கு பக்தி ப்ரபத்தி என்ற இரண்டுமே நமக்கு உபாயங்களான போதிலும் ப்ரபத்தியே நம் போன்றோர்கட்கு தக்க உபாயம் என்று ஆறு ஸ்லோகங்களால் அருளுகிறார்.

10. 52ம் ஸ்லோகத்தால், ஸ்ரீ பூமி ஸஹிதமாக ஸ்ரீ தேவ நாதன் கருட நதிக்கரையில் உலாவி அடியார்களுடைய பாபங்களைப் போக்கியருளுவதை விவரிக்கிறார்,

11. கடைசீஸ்லோகம்- பலஸ்ருதி. முந்தைய ஸ்லோகத்தால் ஜய ஜோஷம் **ஜய விபுதபதே1** என்கிறார் இந்த ஸ்லோகத்தில் ஆறு விசேஷணங்கள், ஆராத காதலைத் தூண்டும் விசேஷணங்கள்.

நிரவதி குண ஜாதம், நித்ய நிர்தோஷம், ஆத்யம் நரகமதரதக்ஷம் நாகிநாம் ஏகநாதம், விநத விஷய ஸத்யம் என்று வியந்து இதனால் தானும் ஸத்யனைப் பற்றி துதித்ததால் ஸத்யவாதீ என்ற பெயரைப் பெற்றதைக் கூறி முடிக்கிறார்.

21. ஸ்ரீ தேஹளீஶ ஸ்துதி

ஸ்வாமியின் ஶாஸ்த்ர புலமைக்கும் ரஸிகத்திற்கும் எடுத்துக் காட்டாக அமைந்த ஸ்தோத்ரம் இது.

நடு நாட்டுத் திருப்பதிகளில் ஒன்றான திருக்கோவிலூரில் ஸேவை ஸாதிக்கும் ஸ்ரீ த்ரிவிக்ரம ஸ்வாமியைப் பற்றியது இந்த ஸ்தோத்ரம். இடைகழி எம்பெருமான் என்றும் **தேஹளீஶன்** என்றும் இவரை அழைப்பர்.

மூவரை முன்னிட்டுக் கொண்டு இவ்வெம்பெருமான் தோன்றினார். மூன்று ஆழ்வார்கள் மூலம் தமிழ்மறை அவதரித்தது. த்ரிவிக்ரமன் திருவடியில் தோன்றிய கங்கை போல் இந்த ப்ரபந்தங்கள் ஸம்ப்ரதாயத்தினையும் உலகினையும் புனிதமாக்குகிறது.

உலகமுண்ட பெருவாயன் இவன். கோவர்த்தனம் என்னும் கொற்றக்குடையின் நாயகன். உலகமளந்தவன், உல காண்டவன், இவன் உத்தமன். இவன் விஷயமாக உலக மனைத்திற்கும் குருவான வேதாந்தவாசிரியன் விளம்பின ஸ்தோத்ரமிது.

விக்ரம்ய யேந விஜிதாநி என்று தொடக்கம். இவன் **கோப்தா** ரக்ஷகன். உலகத்தைக் காப்பவன். எல்லா புருஷார்த்தங்களையும் கொடுத்து அருள்பவன் இவன் என்று பொருள்.

ஸம்ப்ரதாய அர்த்தங்களான, தத்த்வம், ஹிதம், புருஷார்த்தம் ஆகிய மூன்றையும் வெளிப்படுத்துகின்றது முதல் ஸ்லோகம். **உலகம் யாவையும் தாமுள வாக்கலும்** என்கிற கம்ப நாட்டாழ்வானின் மங்கள ஸ்லோகமும் இங்கு நோக்கத் தக்கது. ஸ்ரீபாஷ்யகாரரும் **அகிலபுவந ஜன்ம ஸ்தேம பங்காதி லீலே** என்றல்லவோ ஸ்ரீபாஷ்யத்தை மங்கள ஸ்லோகமிட்டு

ஆரம்பிக்கிறார். இப்படிப் பெரியோர்கள் காட்டிய வழியை அநுஸரித்து அதன்படியே ஸ்தோத்ரத்தை அநுக்ரஹிக்கிறார் ஸ்வாமி.

இது போலவே, எம்பெருமானின் பெருமையை 12வது ஸ்லோகத்தால் விளக்குகிறார். அவனுடைய திருவடியை அடைந்தவர்கட்கு ப்ரஹ்மத்வம் கிடைக்கிறது. அவனுடைய திருவடி தீர்த்தத்தை ஶிரஸ்ஸில் கொள்பவர்க்கு சிவனாக ஆகும் பேறு கிடைக்கிறது. ஸ்வாமியின் ஸமத்காரமான வாக் சாதுர்யத்தை ரஸியுங்கள். அவதார காலத்திலே அவன் திருவடியை பூஜித்தவன் மஹாபலி. அவன் ப்ரஹ்மாவாக ஆகப் போகிறவன். சிவன் முன்பு சிவனாக மட்டுமே இருந்தான். தற்போது திருவடி தீர்த்தத்தைச் தன்னுடைய தலையில் சேர்த்துக் கொண்டதினால் சிவனானான்- மங்கள வடிவினன் ஆனான் என்கிறார். பெருமாளுடன் ஏற்படும் ஸம்பந்தத்தின் மஹிமை தான் என்னே!

வேதாந்தங்களின் ஸாரம் அறிந்தவன் வேங்கடேஶன். பாட்டுக்களைப் பிறப்பித்தவன் விஷயமாக பாடிய துதி நூல் ஆகையால், இதனை ஸ்வாமி ''வேங்கடேஶநகீதா'' என்று பெருமையுடன் கூறி ஸ்தோத்ரத்தைத் தலைகட்டுகிறார். இதில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் அனைத்தும் ஸத்யமே! என்று குதூஹலிக்கிறார்.



22. ஸ்ரீ ஸ்துதி

பிராட்டிமார்கள் விஷயமாக அருளப்பட்ட ஸ்தோத்ரங்கள் மூன்று. ஸ்ரீ ஸ்துதி, பூஸ்துதி, கோதா ஸ்துதி (22, 23, 24) ஶரணாகதி செய்து கொள்ளும் பொழுது முதலில் பிராட்டியைத் தான் ஶரணடைந்து எடுத்துக் கொண்ட கார்யம்/முயற்சி செவ்வனே முடிய வேண்டும் என ப்ரார்த்திக்கிறோம். தேவிமார்கள் புருஷகாரபூதையாக இருந்து நமக்குச் செய்யும் உபகாரங்களைப்பற்றி பல படியாக எடுத்துக் கூறி மகிழ்கிறார். பெரிய பிராட்டியாருக்கும் விபுத்வம் உண்டு என்று ஸ்தாபநம் செய்கிறார்.

இப்புஸ்தகத்தின் முகவுரையில் கூறப்பட்டு இருப்பதைப் போல ஸ்வாமியால் அருளிச் செய்யப்பட்ட ஸ்தோத்ரங்கள் வெறுமனே கவிதா ரஸத்தை அநுபவிப்பதற்காகவோ அல்லது அழகு, நடை, இனிமை ஐஹிக லௌகிக ரஸம் இவற்றிற் காகவோ அநுக்ரஹிக்கப்பட்டவை அல்ல. வேதாந்த தத்த்வங்கள், பக்தி போன்றவைகளை ரஸமாக எடுத்துக் கூறி அனைவரும் அநுபவிப்பதற்காக அருளிச் செய்யப்பட்டவை. ரஹஸ்யங்களை தன்னுள்ளே அடக்கிக் கொண்டிருக்கும் ஸ்தோத்ரங்கள் பல உண்டு. மந்த்ரங்களின் தத்த்வங்களையும் ஶக்தியையும் அதனுள்கொண்டு அமைக்கப்பட்டவை. அதனால் தான் இந்த புஸ்தகத்தை 'தேஶிகோபநிஷத்' என்று பெயரிட்டு அழைக்கிறோம். இந்த ஸ்தோத்ரங்களால் நாம் பெறும் பேறு அளவிலடங்கா. ஸ்வாமி ஸாதித்திருக்கிற ஸ்தோத்ரங்களில் வெகுவாய் அந்தந்த தேவதா ஸம்பந்தமான மந்திரங்களையும் பீஜாக்ஷரங்களையும் அடக்கி மறைத்து மந்த்ர ஸித்தியால் கிடைக்கும் பலன்களை அந்தந்த ஸ்தோத்ர அநு ஸந்தானத்தினாலேயே பெற முடியும்படி அருளியிருக்கிறார் என்பதில் எள்ளளவும் ஸந்தேஹமில்லை.

நமக்கு வேண்டியதெல்லாம் ஸ்வாமி ஸாதித்திருக்கும் ஸ்தோத்ரங்கள்பால் திடமான விஸ்வாஸம். எந்தத் துதி நூலை எடுத்தாலும் அதில் வேதார்த்தங்கள், உபநிஷத்துக்கள் கூறும் பொருள், புராணங்கள், ஶாஸ்த்ரங்கள் கூறும் வழிகள் இவைகள் இல்லாமல் இருக்காது.

இந்த ஸ்ரீ ஸ்துதி ஸ்தோத்ரத்தின் மஹாத்மியம்.

1. இது பிராட்டி விஷயமாக அருளிச் செய்யப்பட்ட ஸ்தோத்ரம்.
2. ஸ்வாமி ஆளவந்தார் பிராட்டி விஷயமாக நான்கு ஸ்லோகங்களை நமக்களித்தார். (சது ஶ்லோகீ) இவரோ, அதனை ஆறு மடங்காக்கி 24 ஸ்லோகங்களை அருளினார். ஒன்று பல ஶ்ருதி.
3. தாயார் விபுவான படியால், ஈஶ்வர கோஷ்டியைச் சேர்ந்தவள். பெருமானும் பிராட்டியும் சேர்ந்த மிதுனமே நமக்கு **தைவதம்** என்கிற நம் ஸித்தாந்தத்தை வெளியிடுகிறார். த்வந்த்வமந் யோந்ய லக்ஷ்யம், தம்பதீ தைவதம் ந: ஐகமத்யோப பந்நாம் முதலான வாக்யங்களினால் ஶாஸ்த்ர ஸம்ப்ரதாய முறையை மீறாமல் எளிய முறையில் தத்த்வ நிர்ணயம் செய்திருக்கும் பாங்கே தனி அழகு.

முதல் ஸ்லோகத்திலேயே **த்வாம் ஶரண்யாம் ப்ரபத்யே!** என்ற வாக்யத்தின் மூலம் பிராட்டியின் விபுத்வம் (எங்கும் நிறைந்த தன்மை) ஈஶ்வரத்வம் உபாயோபேய பாவம் ஶரணாகதி ஶாஸ்த்ரத்தின் தத்த்வம் ஆகியவைகளை தெளிவாகத் தெரிவிக்கிறார்.

ஒன்பதாவது ஸ்லோகத்திலே ஒரு மிதுனமே உத்தேஶ்யம் என்பதை வெகு அழகாகச் சித்தரிக்கிறார்.

எல்லோருக்கும் இந்த ஸ்ரீ ஸ்துதி நம் ஊருக்கே வேண்டும் என்று நினைப்பதும் எண்ணுவதும் இயற்கையே.

(a) திருக்கச்சிக்கு - **ஸந்நிதத்தாம் ஸதா மே**

(கடைசி ஸ்லோகம்) மற்றும் காமதேநு விரும்பும் பலன்களைத் தருபவளாய் என்பதால்.

(b) ஸ்ரீரங்கத்திற்கு - **மங்களம்** மங்**களாநாம்**

(c) திருவேங்கடவனுக்கு - **மநாதீத** என்ற தொடக்க வைபவமும்

(d) திருவயிந்தைக்கு - **ஸரஸிஜ நிலயாயா** ஸ்தோத்ரம் என்பதும்

(e) ஸ்ரீ ஹயக்ரீவன் - **மது விஜயிநோ** விஷயம் என்று தொடக்கத்திலும் முடிவிலும் கூறி இருப்பது.

அனைத்தும் ஏற்கத் தக்கவையே! இந்த ஸ்தோத்ரத்தை அநு ஸந்திப்பவர்கள் மோக்ஷ ஸாம்ராஜ்யத்திலேயும் முடி சூடி நிற்கும் சக்ரவர்த்திகள் ஆவார்கள் என்று முடிக்கிறார்.

23. பூஸ்துதி

பூமிப்பிராட்டியைப் பற்றியது இந்த ஸ்தோத்ரம். 33 ஸ்லோகங்கள். அஶரண: ஶரணம் ப்ரபத்யே! என்று பிராட்டியார் ஸ்தோத்ரங்களில் தொடக்கத்திலேயே இடம் பிடித்துக் கொண்டது.

இப் பூமிப் பிராட்டியின் பற்பல திருநாமங்களை 6வது ஸ்லோகத்தில் விவரிக்கிறார். இவளுடைய பெருமைகளும் பலப்பல.

எம்பெருமான் ஸ்ரீ தேவியைத் திருமார்பிலே தரித்தான். பூமி தேவியையோ ஆதிசேஷ ரூபங்கொண்டு ஆயிரம் சிரஸ்ஸுகளால் தாங்குகின்றான். இதனால் இவளிடத்தில் இருக்கும் ப்ரீதிக்கு தான் எல்லை யுண்டோ?

பூமிப் பிராட்டி தானும் ஒரு அவதாரத்தில் எம்பெருமானுக்கு ஸஹாயம் செய்ய வேண்டும் என எண்ணி ஸாது பரித்ராணத்திற்காக வராஹ அவதாரம் செய்ய திருவுள்ளம் பற்றிய ஸமயத்தில் கோல வராஹமாய் நீலக் கடல் கடைந்து தன்னைப் பெறுவதற்கு ஏற்ப ஸமுத்ரத்தில் மறைந்தாள். வராஹ ரூபங்கொண்ட ஸ்ரீ வைகுண்ட நாதன் இவளை மீட்டு எடுக்கிறான். பிராட்டியைப் போன்றே இவளும் புருஷகார பூதையாக இருந்து சேதநர்கள் எம்பெருமானை அடைவதற்கு சிறந்த உபாயமாக உள்ளாள். இவள் இந்த உலகுக்கு ஈஸ்வரி என்று வேதம் உரைக்கின்றது. அஸ்யே ஶாநா ஜகதோ விஷ்ணு பத்நி என்பதல்லவோ ஶ்ருதி வாக்யம். இவளுடைய இத்துதியை அநுஸந்திப்பதால் ஸகல பலன்களும் கிடைக்கும் என்று உறுதிபடக் கூறுகிறார் ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன்.

24. கோதா ஸ்துதி

ஸ்ரீ வில்லிபுத்தூரில் பெரியாழ்வாரின் திருமகளாக அவதரித்த ஆண்டாளைப் பற்றிய ஸ்தோத்ரமாகும். ஸம்ப்ரதாயத்தில் தனுர்மாஸ உஷத்கால ஆராதநத்தில் இந்த ஸ்தோத்ரத்தை தினமும் அநுஸந்தித்து மகிழ்வர், பெரியோர்களும், பாலர்களும், மாதரசிகளும்.

இவ்விதம் சூடிக் கொடுத்த சுடர்க் கொடியின் பெருமைகளைப் பல வகையிலும் பரக்கப் பேசி நவவித ரஸங்களையும் ஸ்லோகங்களில் ஆங்காங்கே புகுத்தி பெரு மகிழ்வு கொள்கிறார் ஸ்வாமி.

இவளைத் திருமகளாக அடைந்ததால் ஸ்ரீ பெரியார்வாருக்கு கிடைத்த பெருமை- **லேபே மஹத்தர பதாநுகுணம் ப்ரஸாதம்,** தென்திசைக்கு ஸ்ரீ ஆண்டாளின் அவதாரத்தால் கிடைத்த ஏற்றம், தோழிகளின் பரிஹாஸப் பேச்சு (13வது ஸ்லோகம்) வனமாலையைக் காட்டிலும் இவள் சூடிக் கொடுத்த மாலையின் ஏற்றம், பிராட்டிக்கே உரித்தான புருஷகார பாவம் (ஸ்லோகம் 24) என்றெல்லாம் பேசி த்யாந ஸ்லோகமாக **ஸூதமக மணிநீலா** என்றருளிச் செய்து இந்த ஸ்துதியை ஸேவிப்பவர்கள் எம்பெருமானை அடைந்து கைங்கர்ய ஸாம்ராஜ்யத்தினைப் நிச்சயம் பெறுவர் என்று முடிக்கிறார்.

25. ஸுதர்ஶநாஷ்டகம்

எம்பெருமானின் பஞ்சாயுதங்களில் ஒன்று ஸுதர்ஶநம். இவரை சக்ரராஜன், சக்ராயுதம், திருவாழியாழ்வான் என்றெல்லாம் அழைப்பர். இந்த திவ்யாயுதத்தால் பல பல கார்யங்களை சேதநர்களை ரக்ஷிப்பதன் பொருட்டு எம்பெருமான் விளையாட்டாகச் செய்கிறான். இவரை நம் சரீரத்தில் தரிப்பதால் தான் நமக்கு ஸ்ரீவைஷ்ணவத்வம் கிடைக்கிறது. ***தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி திகழ் திருச்சக்ரத்தின்*** *என்ற பாசுரத்தை நினைவிற் கொள்க. எம்பெருமானின் திருக்கைகளில் திவ்ய ஆயுதமாக மட்டுமின்றி இருப்பதல்லாமல் அவனுடைய திருமேனி ஸௌந்தர்யத்தின் சோபையையும் கூட்டுகிறார், இந்த ஸுதர்ஶநாழ்வான்.*

நம்முடைய தர்ஶநத்தில் மிகவும் உயர்ந்த ஸ்தானம் **ஸுதர்ஶநர்** என்று போற்றப்படும் சக்கரத்தாழ்வார். ஹேதிராஜன் என்றோர் பெயரும் இவருக்கு உண்டு. அஹிர்புத்யந் எனப் பெயர் பெற்ற ருத்ரனான சிவபெருமான் இவர் விஷயமாக பல ரஹஸ்யங்களை நமக்கு அளித்தவர்.

திருப்பல்லாண்டு பாடிய பெரியாழ்வாரும் **வடிவார் சோதி வலத்துறையும்** சுடராழியும் பல்லாண்டு என்று மங்களாஶாஸநம்.

ஸ்வாமி நம்மாழ்வாருக்கு இவரிடத்தில் இருக்கும் ப்ரீதி எல்லையற்றது. **ஆழிப்பிரான் எனக்கே உளன், கூராராழி வெண் சங்கேந்தி காண** வாராய் என்றும் பல படிகளிலே **திருவாய்மொழியில்** ஸம்போதனம் செய்கிறார்.

இவரைப்பற்றி எட்டு ஸ்லோகங்களால் எண் திசைகளுக்கும் எட்டும்படி வெற்றி முரசு கொட்டுகிறார், நம் ஸ்வாமி. ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றிக் கொள்ள இந்த ஸ்தோத்ரமே நமக்கு ரக்ஷை என்கிறார். அது போலவே ஸகல காரிய ஸித்தியும் ஏற்படும். பல்வேறு ஸாரார்த்தங்களை கொண்டது இந்த ஸ்தோத்ரம் என்பதை தாமே **ப்ரபூத ஸாரம்** என்னும் பதத்தால் குறிப்பிட்டிருப்பது ஸ்வாரஸ்யம்.

26. ஷோடசாயுத ஸ்தோத்ரம்

ஸித்தாந்த ஸ்தாபநம் செய்வதற்கு பேருதவிபுரிந்தவர்,
இந்த ஆயுதேஶ்வரன். திரிஸுதர்சநர் ஈரெண் புயங்களே!

இந்தத் துதிநூலும் திருவாழியாழ்வானைப் பற்றியதே! இவருக்கு 16 திருக்கைகள். ஒவ்வொரு கைக்கும் ஒவ்வொரு ஆயுதம். **ஆயுதேஶ்வரன்** என்று அன்புடன் அழைத்து ஸ்தோத்ரத்தை ஆரம்பிக்கிறார்.

ஒரு ஸமயம் காஞ்சிபுரத்திற்கு அருகாமையில் உள்ள திருப்புட்குழி என்ற திவ்ய தேஶத்தில் ஜநங்கள் சீதஜ்வரத்தினால் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது, அதனைக் கேட்ட ஸ்வாமி அந்த ஜநங்கள்பாலுள்ள மிகுந்த வாத்ஸல்யத்தால் இதனை அருளிச் செய்ததாகப் பெரியார் பணிப்பதுண்டு.

ஸ்வாமி தமிழிலே **பரமதபங்கம்** என்ற ப்ரபந்தத்தை அருளியபோது தாம் பிறமத நிரஸனம் செய்வதற்கு உறுதுணையாக இருந்தவர் ஸ்ரீ ஸுதர்ஶநரே என்று கூறி இறுதிப் பாசுரத்தில் திருவாழியாழ்வான் தன்னுடைய பதினாறு திருக்கைகளில் ஏந்தியுள்ள ஆயுதங்களைப் பற்றி விபரமாகக் கூறுகிறார். ஸாதுக்களின் நலனுக்காவும் தீராத வ்யாதி, நோய் போன்றவைகளைப் போக்கடிக்கவும் (கொரானா உட்பட....?) இதனைப் பெரியோர்கள் பாராயணம் செய்வதுண்டு.

27. யதிராஜ ஸப்ததி

தர்ஶந ஸ்தாபகரான ஸ்ரீபாஷ்யகாரரைப் பற்றிய துதி நூல். தர்ஶநத்தின் ***நாயக மணி*** *இவரே. இந்த ஜகதாசார்யனின் கருணையோ அளவிட முடியாதது. இந்த ஸ்ரீ ராமாநுஜ ஸித்தாந்தம் பெரும் புகழை உடையது. கால தத்வம் உள்ளவரை எவராலும் அழிக்கமுடியாது. இவர் காட்டிய வழியே நல்வழி. தம்முடைய ஆசார்ய பக்திக்கு போக்கு வீடாக இதனை அருளிச் செய்து ஆனந்தமடைகிறார் நம் ஸ்வாமி.* ***போற்றியுகப்பதும் புந்தியிற் கொள்வதும் பொங்குபுகழ் சாற்றி வளர்ப்பதும்*** *நம்முடைய கர்த்தவ்யம் என்று ஸ்வாமியே ஸாதித்தபடி ஆசார்யனிடம் தமக்கு இருக்கும் விசேஷ பக்தியை விஸ்தாரமாகக் கூறுகிறாரிதில்.*

நம் தர்ஶந ஸ்தாபகரான ஸ்ரீபாஷ்யகாரரின் பெருமையை யாரால் அறுதியிட்டுக் கூற முடியும்? ஸ்வாமி ஸ்ரீ தேஶிகனுக்கு இந்த ஜகதாசார்யரிடம் உள்ள பக்திக்கு எல்லை நிலமாக அமைந்தது இந்த ஸ்தோத்ரம் எனலாம். 74 ஸிம்ஹாஸனாதி பதிகள் என்ற நினைவினாலோ என்னவோ இந்த ஸ்தோத்ரமும் 74 எண்ணிக்கையில் உள்ளது. ஸ்ரீ தயா ஶதகம் போல் இதுவும் பல்வேறு விருத்தங்களில் அமைந்த ஸ்தோத்ரம் ஸ்வாமியினாலேயே மிகவும் ஸாரமுள்ள ஸ்தோத்ரமிது என்ற புகழைப் பெற்றிருப்பது இது. 71வது ஸ்லோகத்தால் - **ஸப்தத்யா ஸாரவத்யா ஸமதநுத ஸதாம் ப்ரீதி மேதாம் ஸமேதாம்** - இது விளங்கும். இந்த ஸ்தோத்ரங்களில் காணப்படும் அர்த்த விசேஷங்கள் அநேகம். இவையனைத்தையும் **பன்னி யுரைக்குங்கால் பாரதமாம்.**

எனிலும், ஒன்றிரண்டை மட்டும் இங்கு விஜ்ஞாபிக்கிறேன்.

1. ஶரணாகத ஸார்த்தவாஹர் என்று ஸ்ரீ பாஷ்யகாரரை புகழ்கிறார். ஸார்த்தவாஹர் என்றால் கூட்டத்தின் தலைவர். ப்ரபன்னர்கள் என்னும் மாபெரும் கூட்டத்திற்குத் தலைவர்.

2. ஶரணாகதி என்பது ஒரு அருமருந்து. அநுஷ்டிக்க மிக ஸுலபம். பலனோ அளவில்லாதது. இப்படி இந்த ஹிதமான வழியைக் காட்டிய பெருமை நம்பிராமாநுசனையே சேரும்.

3. நாரணனைக் காட்டிய வேதம் களிப்புற வந்தவதரித்தவர் நம்மிராமநுசன். ஶ்ருதி வாக்யங்களுக்குள் பேதமில்லை என்று ஸ்லோகம் 36ல் ஸ்ரீ பாஷ்யகாரர் நிர்வாஹம் செய்த திறமையைக் கண்டு வியந்து பேசுகிறார். பிற தர்ஶநங்கள் எல்லாம் எங்கோ ஓடிப்போயின.

4. குருபரம்பரையிலே இவரை நாயகமணி. இவரால் அல்லவோ ஹரி தத்த்வம் அக்ஷதமாயிற்று.

கடைசியில் இந்த ஸ்துதியைக் கசடற கற்பவர்களுக்கு நம் ஸித்தாந்தத்தைப் பற்றிய தெள்ளிய அறிவும், ஸ்ரீபாஷ்யகாரர் நமக்குச் செய்த பேருபகாரத்தையும் எப்போதும் மனதில் கொள்வர் என்கிறார்.

28. ந்யாஸ விம்ஶதி

> *நல்லதொகு நீதிநூலாகும் இது. இதில், ஆசார்ய லக்ஷணங்களைப் பற்றி விரிவாகக் கூறுகிறார். ஸதா ஸர்வகாலமும் ப்ரஹ்மத்தைப் பற்றிய சிந்தனையும் தன்னை அண்டின சிஷ்யனை திருத்திப் பணி கொள்வதும் அவருடைய தர்மம் என்பதைப் பற்றியும் விளக்குகிறார். இது போலவே, மூன்றாவது ஸ்லோகத்தில் சிஷ்யர்களுடைய கடமையையும் லக்ஷணங்களையும் தெளிவாக எடுத்துரைக்கிறார். இந்த ஸ்தோத்ரத்தின் மேன்மையும் முக்யத்வமும் மிகவும் உயர்ந்தது என்பது ஸ்வாமி தாமே ஸாதித்தருளிய வடமொழி வ்யாக்யாநத்தின் மூலம் அறியலாம்.*

ந்யாஸம் என்னும் ப்ரபத்தியைப் பற்றி இருபது ஸ்லோகங்களால் கூறும் நூல் இது. இது ஒருவரைப் பற்றிய தனித்துதியில்லை என்றாலும் ந்யாஸ வித்யையைப் பற்றி விரிவாக ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன் இதில் கூறுவதால், இதனையும் ஸ்தோத்ரப்பாட க்ரந்தங்களில் வெகு நாட்களாகவே பெரியோர்கள் இதனையும் சேர்த்தே அநுஷ்டித்து வந்திருக்கிறார்கள்.

இதில் ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன் ஆசார்ய லக்ஷணம், சிஷ்ய லக்ஷணம் ஆசார்யன் செய்யும் ஏகாந்த உபதேஶம். பக்தி, ப்ரபத்திகளுக்கான யோக்யதை, இவைகளின் பெருமை/ மேன்மை, இவ்விஷயமாக ஏற்படும் ஸந்தேஹங்கள், பரிஹாரங்கள் ஆகியவற்றையெல்லாம் விளக்கமாக கூறி முடிக்கிறார். ப்ரபத்தி பற்றிய ஶாஸ்த்ரார்த்தங்களை எவ்விதமான ஸம்ஶயமுமின்றி கற்க வேண்டுமாயின் இதன் அநுஸந்தானம் ஆவஶ்யகம்.

ஸ்ரீமத் வேதாந்த தேசிக மங்களம்

ஸ்ரீமத் நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த துதி நூல்கள் பல. தலைப்பில் சொல்லப்பட்ட ஸ்ரீதேசிக மங்களம் ஸ்வாமியினுடைய திருக்குமாரரும் திருநாங்கூர் ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன் முதலானோருக்கு ஆசார்யருமான ஸ்ரீகுமார வரதாசார்யர் வடமொழியில் அருளிய துதி நூலாகும். மொத்தம் பதிமூன்று ஸ்லோகங்கள். ஸ்ரீவைஷ்ணவர்களுடைய க்ருஹங்களிலும் மற்றும் சில ஸந்நிதிகளிலும் ஸேவை சாற்றுமறை க்ரமத்தில் நித்யாநுஸந்தானமாக பெரியோர்களால் இன்றளவும் இது அநுஷ்டிக்கப்படுவது யாவரும் அறிந்ததே!

ஸ்ரீதிருவேங்கடமுடையான் மங்கள நிதி. மஹர்ஷி வால்மீகி 'மாநிஷாத' என்று முதன் முதலில் மங்களம் பாடினார் என்பது ஸம்ப்ரதாயம். அத் திருவேங்கடமுடையானே சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையானாக அவதரித்தான். எனவே, இவரும் மங்கள நிதி தானே! ஆகையால், ஸ்வாமியின் திருக்குமாரர் திவ்யமான மங்களத்தைத் தம்முடைய ஸ்வரூப ஸித்திக்காக ஆஶாஸிக்கிறார். அனைவரும் ஸகல மங்களங்களையும் பெறவேண்டும் என்கிற உன்னதமான நோக்கத்துடன் அருளிச் செய்யப்பட்ட ஸ்தோத்ரமிது.

முதலில் இம் மங்களத்தை அநுஸந்தித்தவரை நினைக்க வேண்டுமன்றோ!! அதனால், அருளிச் செய்த ஸ்வாமியின் தனியனை முதலில் ஸேவிப்போம்.

ஸ்ரீகுமார வரதாசார்யரின் தனியன்

ஸ்ரீமந் லக்ஷ்மண யோகீந்த்ர ஸித்தாந்த விஜயத்வஜம்।
விஶ்வாமித்ர குலோத்பூதம் வரதார்யம் அஹம் பஜே!!

இத் தனியனை அருளிச் செய்தவர் ஸ்ரீப்ரஹ்ம தந்த்ர ஸ்வாமி. மஹானுன இந்த ஸ்வாமி ஸ்வாமி ஸ்ரீதேஶிகனிடமே ஸர்வ ஶாஸ்த்ரங்களையும், நமது ஸித்தாந்தமான விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தையும் ஏனைய ஸம்ப்ரதாய க்ரந்தங்களையும் அதிகரித்தவர். ஸ்வாமி ஸ்ரீதேஶிகனுடைய திருக்குமாரரோடு தமக்கு ஏதேனும் ஒரு வகையில் ஸம்பந்தம் வேண்டும் என்ற அளவற்ற அவாவினுல், தம்மை விட சிறியவராக இருந்த போழ்திலும், அவரிடமே பகவத் விஷயத்தைக் காலக்ஷேபம் செய்தருளினுர் என்பது குருபரம்பரா க்ரந்தங்களிலே ப்ரஸித்தம்.

தனியனின் பொருள் - ஸ்ரீபாஷ்யகாரர் யோகிகளுக் குள்ளேயே தலை சிறந்தவர். யதிராஜர். ஸ்ரீலக்ஷ்மணாசார்யர் என்றும் ஸ்ரீபகவத் ராமாநுஜாசார்யர் என்றும் புகழ் பெற்றவர். வைதிக, லௌகிகச் செல்வங்கள் அனைத்தும் நிரம்பியவர். இப்படிப்பட்ட, தர்ஶந ஸ்தாபகரான ஸ்ரீபாஷ்யகாரரின் ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு எப்பொழுதும் வெற்றிக் கொடியை நிலை நாட்டியவரும், மந்த்ர த்ருஷ்டாவான ஸ்ரீவிஶ்வாமித்ரரின் கோத்ரத்தில் தோன்றியவருமான ஸ்ரீ (குமார) வரதாசார்யர் என்ற மஹானை அடியேன் ஸேவிக்கிறேன். அவரையே ஶரணமடைகிறேன் என்கிருர்.

ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ராய ஸிம்ஹாய கவிவாதிநாம் ।
வேதாந்தாசார்ய வர்யாய வேங்கடேஶாய மங்களம் ॥ 1 ॥

பொருள்: ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ரராயும், கவிவாதி சிங்கமாயும், வேதாந்தாசார்யருமான வேங்கடேஶனுக்கு மங்களம் உண்டாகட்டும். மங்கள தேவதையான பிராட்டியருளிய பிருதமான ஸர்வ தந்த்ர ஸ்வதந்த்ராய என்று தொடங்குகிருர்.

இரண்டாவதாக பாதுகாஸஹஸ்ர நிர்மாணத்தைக் காட்டும் வகையில் பெரிய பெருமாள் அளித்த **வேதாந்தாசார்யர் என்ற பிருதினைக் கூறுகிருர்.**

மூன்ருவதாக பிதாவான ஸ்ரீஅனந்த ஸூரியானவர் இட்ட பெயர் ஸ்ரீ வேங்கடேசன். இப்படி ப்ரஸித்தி பெற்ற ஸ்ரீவேதாந்த தேஶிகவர்யருக்கு மங்களம் உண்டாகட்டும் என்று பொருள்.

நபஸ்யமாஸி ஶ்ரோணாயாம் அவதீர்ணாய ஸூரயே ।
விஶ்வாமித்ராந் வயாயாஸ்து வேங்கடேஶாய மங்களம் ॥ 2 ॥

பொருள்: நம் ஸ்வாமியின் அவதார மாஸம், திருநக்ஷத்ரம், கோத்ரம், நித்யஸூரியின் அம்ஶமாக இவர் தோன்றியது ஆகிய விபரங்கள் இங்கே சொல்லப் படுகின்றன. உத்தமமான புரட்டாசித் திருவோணம் என்னும் நாளே என்றபடி அவதாரம் என்று அநுபவிக்கிருர். ஶரணுகதரக்ஷணம் உடைய நக்ஷத்ரமே ஸ்வாமியின் திருநக்ஷத்ரமாயிற்று.

பிதா யஸ்யாநந்தஸூரி: புண்டரீகாக்ஷ யஜ்வந: ।
பௌத்ரோயஸ் தநயஸ் தோதாரம்பாயாஸ் தஸ்ய மங்களம் ॥ 3 ॥

பொருள் : ஸ்ரீஅனந்தஸூரி திருத்தகப்பனர் - பலபல யாகங்களை அநுஷ்டித்த ஸ்ரீபுண்டரீகாக்ஷர் என்கிற யஜ்வாவுக்கு பெயரர். தோதாரம்பையார் திருத்தாயார், அத்தகைய ஸ்ரீதேஶிகனுக்கு மங்களம் உண்டாகட்டும்.

வேங்கடேஶாவதாரோऽயம் தத்கண்டாம்ஶோऽதவா பவேத்
யதீந்த்ராம்ஶோऽதவேத்யேவம் விதர்க்யாயாஸ்து மங்களம் ॥ 4 ॥

பொருள் : இந்த மஹான் திருவேங்க முடையானின் அவதாரமா? அல்லது அந்த திருவேங்கட முடையானின் திருமணியாழ்வானின் அம்ஶமா?

இல்லையேல், யதிராஜரான ஸ்ரீபாஷ்யகாரரின் அம்ஸமா? என்று பலவகைகளில் ஊஹம் செய்யப் படுபவரான ஸ்ரீவேதாந்த தேஸிகனுக்கு மங்களம் உண்டாகட்டும்.

ஸ்ரீபாஷ்யகார: பந்த்தாநம் ஆத்மநா தர்ஸிதம் புந: ।
உத்தர்த்து மாகதோ நூநம் இத்யுக்தாயாஸ்து மங்களம் ।। 5 ।।

பொருள்: ஸ்ரீபாஷ்யகாரரே தான் காட்டித் தந்த நல்வழியை மறுபடியும் உத்தாரம் பண்ணவே ஸ்வாமி தேஸிகனுக அவதரித்தார் என்று அழைக்கப்பெற்ற ஸ்வாமிக்கு மங்களம்!

யோ பால்யே வரதார்யஸ்ய ப்ராசார்யஸ்ய பராம் தயாம் ।
அவாப்ய வ்ருத்திம் கமித: தஸ்மை யோக்யாய மங்களம் ।। 6 ।।

பொருள் : தமது பால்ய பருவத்தில் பரமாசார்ய வர்யரான அம்மாளின் பரிவுக்கும், கருணைக்கும் பாத்ரராக வளர்ந்த ஸ்வாமி ஸ்ரீதேஸிகனுக்கு மங்களம் உண்டாகட்டும்.

ராமானுஜார்யாதாத்ரேயாத் மாதுலாத் ஸகலா: கலா: ।
அவாப விம்ஸத்யப்தே ய: தஸ்மை ப்ராஜ்ஞாய மங்களம் ।। 7 ।।

பொருள் : தமது அம்மானுன ஆத்ரேய இராமானுஜரிடம் ஸகல கலைகளையும் இருபது வயதுக்குள்ளே கசடற கற்றுத் தேர்ந்தார். இப்படிப் பட்டவருக்கு மங்களம்.

ஸ்ருத ப்ரகாஸிகா பூமௌ யேநாதௌ பரிரக்ஷிதா ।
ப்ரவர்த்திதா ச பாத்ரேஷு தஸ்மை ஸ்ரேஷ்ட்டாய மங்களம் ।। 8 ।।

பொருள் : ஸ்ருத ப்ரகாஸிகை என்னும் உயரிய உரைநூலை கருத்துடனே கட்டிக் காத்து உலகில் முதன் முதலாக சிஷ்யர்களுக்கு உபதேஸித்த உத்தம ஆசார்யரான ஸ்ரீவேதாந்த குருவுக்கு மங்களங்கள் உண்டாகட்டும்.

ஸாம்ஸ்க்ருதிபிர் த்ராமிடீபி: பஹ்வீபி: க்ருதிபிர் ஜநாந் ।
யஸ்ஸமுஜ்ஜீவயாமாஸ தஸ்மை ஸேவ்யாய மங்களம் ।। 9 ।।

பொருள் : தென் மொழியிலும் வட மொழியிலும் நூற்றுக் கணக்கான நூல்களை இயற்றி இந்த உலகத்தை உஜ்ஜீவித்த மஹானான ஸ்ரீதேஶிகனுக்கு மங்களங்கள்.

ய: க்க்யா திலாப பூஜாஸு விமுகோ வைஷ்ணவே ஜநே ।
க்ரயணீய தஶாம் ப்ராப்த: தஸ்மை பவ்யாய மங்களம் ।। 10 ।।

பொருள் : புகழ், பணம், கௌரவம் போன்றவற்றில் எள்ளளவும் ஆசைப்படாத பவ்யரான ஸ்வாமிக்கு மங்களங்கள்.

யஸ்மாதேவ மயா ஸர்வம் ஶாஸ்த்ர மக்ராஹி நாந்யத: ।
தஸ்மை வேங்கடநாதாய மம நாதாய மங்களம் ।। 11 ।।

பொருள் : தம்மிடமே ஸர்வார்த்த க்ரஹணம் பண்ணும்படி அடியேனுக்கு (ஸ்ரீகுமார வரதாசார்யருக்கு) க்ருபை செய்தருளிய என்னுடைய நாதனான ஸ்ரீதேஶிகனுக்கு மங்களம் உண்டாகட்டும்.

பித்ரே ப்ரஹ்மோபதேஷ்ட்ரே மே குரவே தைவதாயச ।
ப்ராப்யாய ப்ராபகாயாஸ்து வேங்கடேஶாய மங்களம் ।। 12 ।।

பொருள்: என்னைப் பெற்று ப்ரஹ்மோப தேஶமும் செய்வித்து ஆசார்யனாகவும் தெய்வமாகவும் அடையப் பட வேண்டியவரும் அடைவிப்பவருமான வேங்கடேஶருக்கு மங்களம் உண்டாகட்டும்.

ய: க்ருதம் வரதார்யேண வேதாந்தாசார்ய மங்களம் ।
ஆஶாஸ்தே ऽநுதிநம் ஸோ ऽபி பவேந்மங்கள பாஜநம் ।। 13 ।।

பொருள் : இந்த வரதாசார்யர் இயற்றிய வேதாந்தாசார்ய மங்களத்தை அநுதினமும் அநுஸந்திப்பவர்களுக்கு எல்லா விதமான மங்களங்களும் உண்டாகும் என்பது திண்ணம்.

இது தேஶிக மங்களாஶாஸநம். ஸ்ரீவைஷ்ணவர்கள் இதனை அறிந்து கொண்டால் மங்கள பரம்பரைக்குக் குறை ஏதுமில்லை.

ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன்
(திருப்புல்லாணி)

ஸ்ரீ பாஷ்யகாரர்